Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :91 மாசி 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை 28 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# இலங்கை முடிவை நிராகரித்தது ஐ.நா

- பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி எங்கே?
- குற்றவாளிகள் ஏன் தண்டிக்கப்படவில்லை?
- தமிழ், முஸ்லிம்களுக்கு ஏன் பாரபட்சம்?

## ஐ.நா ஆணையாளர் கேள்விக் கணைகள்

கொழும்பு, பெப்ரவரி 28

ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகும் முடிவை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை' இவ்வாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்தார். 23

பொன் அணிகளின் போர், வீரர்களின் போர்

## இரண்டு சமர்கள் இன்று யாழில்!

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான பொன் அணிகளின் போரின் இருநாள் துடுப்பாட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. 23

## சடலம் எரியூட்டுவதற்காக சிறுப்பிட்டியில் களேபரம்!



06

காணாமல் ஆக்கப்பட்ட

## பேரனைத் தேடியவர் நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவு, பெப். 28

காணாமலாக்கப்பட்ட தனது பேரப்பிள்ளைக்கு நீதிகோரி கடந்த மூன்றுவருடங்களாக முல்லைத்தீவில் இடம்பெற்றுவரும் தொடர் போராட்டத்தில் பங்கெடுத்திருந்த பேர்த்தியார் நேற்று உயிரிழந் 08




## யாழில் 689 திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 28

சப்ரிகம திட்டத்தின் ஊடாக 689 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றைச் செயற்படுத்துவதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். 23

## லீசிங் பிரச்சினையால் பெண் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

லீசிங் நிறுவனத்தினருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, தாவடி தெற்கு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற் 08

தேர்தலை இலக்கு வைத்து

## நிதி ஒதுக்கீடு இல்லாமல் 'சப்ரிகம' நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.28

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து நாடு முழுவதும் அவசர அவசரமாக 'சப்ரிகம' திட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் எவையும் உரிய வகையில் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இந்தத் திட்டம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ரணில் அரசு, கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்துக்கு (ஆர்.ஐ.டி.பி.) ஒதுக்கிய நிதியிலிருந்து சிறு தொகை நிதியே, இவ்வாறு மாற்றப்பட்டு இந்தத் திட்டம் ஆரம் 23

## அபிவிருத்திக் கூட்டமா? கட்சிக் கூட்டமா?

அங்கஜனை முற்றுகையிட்டு வேலணையில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28

தீவகப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராம 23

இந்தியக் கடற்படையால்

## இலங்கை மீனவர் ஐந்து பேர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 28

இந்திய எல்லைக்குள் மீன் பிடித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் ஐவர் தனுஷ்கோடிக்கு அருகே இந்தியக் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் பற்றித் தெரிய 08




DFCC Teen உடன் இணையுங்கள்

வீட்டில் சின்னச் சின்ன வேலைகள் செய்து கிடைக்கும் Pocket Money, Gifts ஆகக் கிடைக்கும் பணம் ஆகியவற்றைச் சேர்த்து DFCC Teen Account இல் சேமியுங்கள்.

உங்கள் பெயரிலேயே Debit Card உட்பட மேலும் பல நன்மைகளை நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.

Teen வயதிலுள்ள அனைவருக்கும் ஏற்ற DFCC Teen Account ஐ ஆரம்பிக்க நீங்களும் இன்றே அருகிலுள்ள கிளைக்கு வாருங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC TEEN




DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# தேசியப்பட்டியல் மூலமே எம்.பியாவார் ரணில்!

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28

'பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியல் மூலமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ராகமையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எனக்குக் கிடைத்துள்ள தகவலின் படி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிட மாட்டார் எனவும், அவர் தேசியப் பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார் எனவும் தெரியவந்துள்ளது.

கட்சியின் தலைவரான அவர் ஏன் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றத்துக்கு வருகின்றார் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியே வேட்புமனுக்களை வழங்கும். ரணில் விக்கிரமசிங்கவும் அதில் போட்டியிடலாம். அவர் விரும்பினால் தனியாகவும் போட்டியிடலாம்.

ரணில் விக்கிரமசிங்க தற்போது அமைதியாக இருப்பது தொடர்பாக வியப்பாக இருக்கின்றது. பேச்சுகளை நடத்தினோம். சில இணக்கப்பாடுகளுக்கு வந்துள்ளோம். எதிர்வரும் திங்கட்கிழமை கூட்டணியை உருவாக்குவோம். அன்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ள வேண்டும்.



ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் தொடர்ந்தும் இருக்கின்றேன். கட்சியினரில் பெரும்பாலானோர் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளனர்' - என்றார். (ம-22)

## மனைவியின் கழுத்தை இறுக்கிய கணவன்

சாவகச்சேரி, பெப். 28

மனைவியின் கழுத்தை கயிற்றால் இறுக்கிய கணவன் நையப்புடைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் மந்துவில் மேற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த கனவனுக்கும் மனைவிக்கும் இடையே நேற்றுமுன் தினம் ஏற்பட்ட சண்டையின் போது, கோபம் தலைக்கேறிய கணவன் மனைவியின் கழுத்தைக் கயிற்றால் இறுக்கியுள்ளார். இதையடுத்து அந்தப் பெண் அபயக்குரல் எழுப்பினார். அதனைக் கேட்டு ஓடி வந்த மனைவியின் சகோதரர்கள் குறித்த நபரை (கணவனை) கடுமையாகத் தாக்கினர்.

பாதிக்கப்பட்ட கணவன், மனைவி இருவரும் தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-9)

## இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை!

### தமிழர் மரபுரிமைப் பேரவை எடுத்துரைப்பு

முல்லைத்தீவு, பெப். 28

இலங்கையிலே இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புக்கள் போன்ற விடயங்களுக்கெதிராக இலங்கையை சர்வதேச விசாரணைக்குட்படுத்த அமெரிக்கா உரிய அழுத்தங்களை வழங்க வேண்டுமென அமெரிக்க தூதரக அரசியல் பிரிவு அதிகாரியான அன்ரனியிடம் தமிழர் மரபுரிமைப் பேரவை எடுத்துரைத்துள்ளது என்று தமிழர் மரபுரிமைப் பேரவை அமைப்பின் இணைத் தலைவர்களுள் ஒருவரான விஜயகுமார் நவநீதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற தமிழர் மரபுரிமைப் பேரவை அமைப்பினர் மற்றும், அமெரிக்கத் தூதரக அதிகாரிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-246)

## முல்லை. மாவட்டச் செயலராக விமலநாதனை நியமிக்க முடிவு

யாழ்ப்பாணம், பெப். 28

முல்லைத்தீவு மாவட்டச் செயலராக விமலநாதனை நியமிப்பதற்காக நேற்றையதினம் மீண்டும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெறவேண்டிய நிலையில் அது நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டு நேற்று மாலை இடம்பெற்றது. இதன்பிரகாரமே புதியவரின் பெயர் மீண்டும் அமைச்சரவைக்கு வந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு புதிய மாவட்டச்செயலரை நியமிப்பதற்காக கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி அமைச்சரவையில் அமலநாதனின் பெயர் அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில் அமலநாதனை நியமிக்காது விமலநாதனை நியமிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதி செயலகத்துக்குக் கடிதம் வழங்கியிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே தற்போது விமலநாதன் நியமிக்கப்பட்டார். (ம-105)

### அரசுக்கு இரு வாரம் காலக்கெடு

## உரிய தீர்வில்லையேல் மார்ச் 16 முதல் நாடு முழுதும் தொடர் வேலைநிறுத்தம்

### ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 28

'இரண்டு வார கால அவகாசத்தை அரசுக்கு வழங்கியுள்ளோம். முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை உடனடியாகப் பெற்றுக்கொடுக்காவிடின் மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்' இவ்வாறு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்த தேசிய கல்விச் சேவை சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பிரியந்த பத்லேரிய, மேலும் தெரிவித்ததாவது:

'ஆசிரியர், அதிபர் சேவையை வரையறுக்கப்பட்ட சேவையாக கடந்த அரசு அறிவித்தது. இந்த நிலையில், அந்த நடவடிக்கைளை முன்னெடுக்கும் வரையிலான இடைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை ஒன்றை அரசிடம் முன்வைத்திருந்தோம். அதனை வழங்குவதாகக் கூறி கடந்த அரசு ஒக்டோபர்மாதம் 15ஆம்திகதிமீண்டுமொரு அமைச்சரவைதீர்மானத்தை வெளியிட்டிருந்தது.

இருப்பினும் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததையடுத்து அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இந்த அரசு அதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாகக் கூறியிருந்த போதிலும் எந்தத் தீர்மானத்தையும் பெற்றுத்தரவில்லை.

ஆகவே, இடைக்காலக் கொடுப்பனவை வழங்குதல் உள்ளிட்ட ஏழு அம்சக் கோரிக்கைகளை கல்வி அமைச்சில் கையளித்துக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கான அனுமதியைக் கேட்டிருந்தோம். இருப்பினும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது எமக்கு கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இரண்டு வார காலத்துக்குள் அரசு தகுந்த தீர்மானத்தை பெற்றுத்தரத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் தொடர் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளோம்' என்றார். (ம-22)

## என் மனைவி மீதான விசாரணை அரசியல் பழிவாங்கலின் உச்சம்

### ரிசாத் உதயனுக்குத் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 28

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி காதர் மொஹமட் ஷப்தின் ஆயிஷாவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்திய விசாரணை அரசியல் பழிவாங்கலின் உச்சம் என்றவாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் ரிசாத்.

இது தொடர்பில் அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில நாள்களுக்கு முன்னர் எனது மனைவியின் வீட்டில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆவணங்கள் பொய்யானவை. இது முழுக்கமுழுக்க நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டு. இது அரசியல் பழிவாங்கலின் உச்சம் என்றார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மேற்கொண்டதாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய சதொச பரிவர்த்தனைகள் குறித்த பில்லியன் ரூபாய் மதிப்பு மிக்க தகவல்கள் அடங்கிய ஆவணங்களே அவ்வாறு தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந.ம)

## கொரோனா நோயாளர்களுடன் பாப்பரசர் நேற்று பிரார்த்தனை

### கரம்கொடுத்து கண்ணீர் மல்கினார்

உரோம், பெப். 28

கொரோனாவைரஸால் பாதிக்கப்பட்ட இத்தாலி நாட்டவர்களை நேற்றுச் சந்தித்த பாப்பரசர் பிரான்சிஸ், அவர்களுக்கு கரம்கொடுத்து கட்டியணைத்து கண்ணீர் விட்டழுதார்.



சீனாவை உலுக்கியெடுத்து மிகப் பெரும் உயிரழிவுகளை ஏற்படுத்திவருகின்றது கொரோனா வைரஸ். சீனாவுக்கு அடுத்தபடியாக தென்கொரியா மற்றும் இத்தாலி, ஈரான் ஆகியவற்றில் கொரோனாவின் தாக்கம் விஸ்வரூபம் எடுக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இந்த நிலையில் இத்தாலியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் என்று இனங்காணப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்களுடன் நேற்று பிராத்தனையில் ஈடுபட்டார் பாப்பரசர் பிரான்சிஸ். பிரார்த்தனையின் போது நோயாளர்களை கட்டியணைத்து கண்ணீர் விட்டழுதார். (ம)

# இனித்தான் ஐ.நாவின் ஆட்டம் தெரியவரும்!

## மங்கள எச்சரிக்கைத்தொனி

கொழும்பு, பெப். 28

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக ஜெனிவாவில் அரசு வாய்ச்சவடால் மட்டும்தான் விட்டிருக்கின்றது. ஆனால், அரசை ஐ.நாவும் அதன் உறுப்பு நாடுகளும் சும்மாவிடாது. அவை செயலில் பதிலடியை வழங்கியே தீரும். அதனால் எமது நாடும் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கக்கூடும்' இவ்வாறு சுட்டிக்காட்டினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 40/1, 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்களிலிருந்து அரசு விலகுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் ஜெனிவாக் கூட்டத் தொடரில் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமது அரசு (ரணில் அரசு) நாட்டின் ஜனநாயக நடைமுறைகளை மீறி அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஆலோசிக்காமல் அரசமைப்புக்கு விரோதமாகவே ஐ.நாவின் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கியது என ஜெனிவாவில் வைத்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இப்படி எம்மீது பழியைப் போட்டுவிட்டால் தாம் தப்பிப்பிழைக்கலாம் என்று அரசு எண்ணுகின்றது.

ஆனால், இந்த அரசு இப்படிக் கூறித் தப்பமுடியாது. ஐ.நாவும் அதன் உறுப்பு நாடுகளும் இந்த அரசை சும்மாவிடாது. அவை செயலில் பதிலடியை வழங்கியே தீரும். அதனால் எமது நாடும் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கக் கூடும்.

அரசின் சுயநல அரசியல் தேவையால் சர்வதேச அரங்கில் எமது நாடு தனிமைப்படுத்தப்பட்வுள்ளது. அதேவேளை, எமது நாடு மோசமான பொருளாதார நெருக்கடியையும் சந்திக்கக்கூடும். ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து கிடைக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகூட மீண்டும் இடைநிறுத்தப்படலாம்.

போர் நிறைவடைந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தாலேயே சர்வதேசப் பொறிமுறை விசாரணையை இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபை கொண்டு வந்தது. அந்த இக்கட்டான நிலையில்தான் சர்வதேச உறவைப் பலப்படுத்தும் வகையில் தீர்மானங்களுக்கு எமது அரசு (ரணில் அரசு) இணை அனுசரணை வழங்கியிருந்தது.

நாம் இணை அனுசரணை வழங்கியபடியால்தான் ராஜபக்ச குடும்பத்தினரும், இராணுவ அதிகாரிகளும் மின்சாரக் கதிரையிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அதுமட்டுமல்ல எமது நாட்டின் மரியாதையும் சர்வதேச அரங்கில் காப்பாற்றப்பட்டது.

இப்படியான நன்மைகளை நாம் செய்துள்ள போதிலும் இலங்கையை சர்வதேசத்திடம் காட்டிக்கொடுத்துவிட்டோம் என்று ராஜபக்ச அணியினர் எம்மைத் திட்டுகின்றார்கள். அதேவேளை, தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் எம்மைக் கைது செய்து சிறையில் அடைக்குமாறும் அந்த அணியிலுள்ள ஒருசிலர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதைப் பார்த்து அழுவதா அல்லது சிரிப்பதா என்று எமக்குத் தெரியவில்லை.

ஆனால், சர்வதேசத்தை இந்த அரசு பகைத்துள்ளதால் இலங்கை பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை மட்டும் இப்போது உறுதியாகக் கூறுகின்றோம்' - என்றார்.

(ம-22)



## யாழ்ப்பாண விமான நிலையத்தை மேம்படுத்தும் திட்டங்கள் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாண விமான நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அடுத்தகட்ட மேம்பாட்டுத் திட்டங்கள் விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை ஆராயும் நோக்கில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் அவரது குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்தனர்.

இந்த பயணத்தின்போது, விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்ததுடன் நிலுவையில் உள்ள திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க சந்திரசிறி ஆலோசனைகளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் விமான நடவடிக்கைகளைத் மேலும் தொடங்குவதன் மூலம், வட மாகாணத்தில் இருந்து தென்னிந்தியவுக்கான விமான பயணத் தேவைகள் இலகுவாக்கப்படும். சமீபத்திய உள்நாட்டு இணைப்புடன் எதிர்காலத்தில் சர்வதேச பயண மற்றும் சுற்றுலா சந்தை வளரும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலைய அடுத்தகட்ட அபிவிருத்தி பணிகளுக்கு இந்திய அரசு 300 மில்லியன் ரூபாவை வழங்க உடன்பட்டுள்ளது. இதன் மூலம் சிறிய பொதிகளை கையாளும் கட்டமைப்பு, முனையப் பகுதி, வெளியேறும் நிர்வாக கட்டமைப்பு, நீர் விநியோகம், கழிவு நீர் அகற்றும் கட்டமைப்பு மற்றும் திண்மக் கழிவு வெளியேற்றுவதற்கான கட்டமைப்பு ஆகியன அதன் கீழ் அமைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# சர்வதேச வலைக்குள் இருந்து விடுதலை பெற்றது இலங்கை

## சமல் ராஜபக்ச பெருமிதம்

கொழும்பு, பெப். 28

'ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கு ரணில் அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தமையால் சர்வதேச சமூகத்தின் வலைக்குள் இலங்கை சிக்கியிருந்தது. ஆனால், அந்தத் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து கோத்தபய அரசு தற்போது விலகியுள்ளமையால் நாட்டுக்கு விடுதலை கிடைத்துள்ளது' இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியுள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எவ்வித ஆதாரங்களும் இன்றி இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களையும், போர்க்குற்றச்சாட்டுகளையும் சில நாடுகள் ஜெனிவாவில் முன்வைத்திருந்தன. அதன்பிரகாரம் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இதற்கு ரணில் அரசானது அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி இணை அனுசரணை வழங்கியிருந்தது. இதனால் எமது நாடு சர்வதேச சமூகத்தின் வலைக்குள் சிக்கித் தவித்தது.

எனினும், அந்தப் பொறிக்குள் இருந்து தற்போது நாம் தப்பிவிட்டோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையை நாம் வெறுக்கவும் இல்லை. பகைக்கவும் இல்லை. ஆனால், இலங்கை மீதான தேவையற்ற குற்றச்சாட்டுக்களையும், சர்வதேசத்தின் அநாவசிய தலையீட்டையும் மட்டுமே நாம் எதிர்க்கின்றோம். வன்னியில் இறுதிப் போர் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து அப்பாவித் தமிழ் மக்களை மீட்டெடுக்கவே எமது இராணுவத்தினர் போரிட்டனர். அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர். தமிழ் மக்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றார்கள். இதை ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் புரிந்துகொள்ள வேண்டும்' - என்றார்.

(ம-22)



## இந்திய இழுவைப் படகை முழுவதுமாக தடைசெய்க

### யாழில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 28

இலங்கையின் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளை முற்றாகத் தடை செய்யக்கோரியும், அத்துமீறிய இந்திய மீன்பிடியை தடுக்குமாறு வலியுறுத்தியும் தீவகப் பகுதி மீனவ அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பானம் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்தப் பேரணி, கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஸ்ரான்லி வீதி அலுவலகம் வரை சென்றது. அங்கு தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அமைச்சருக்கு மனுவொன்றை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையளித்தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரகம் வரையில் பேரணி சென்றது. அங்கும் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மனுவொன்றை மீனவர்கள் கையளித்தனர்.

(ம-7,106)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## வீதிகளுக்குப் பெயர் சூட்டுதல்

பின்வரும் வீதிகளுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளமையால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/ அபிப்பிராயங்களை எதிர்வரும் 15.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிகளின் இடஅமைவுகள் பற்றிய சந்தேகங்களை மாநகரசபையில் அறிந்துகொள்ளமுடியும்.

**இம்மானுவல் ஆனல்ட் - மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்**

| இல | குறியீட்டு இலக்கம் | வீதியின் பெயர் | தொடக்கம் | முடிவு | வீதியின் நீளம் (கி.மீ) | சராசரி அகலம் மீற்றர் | வட்டாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 166 | பாசையூர் குடியிருப்பு வீதி | புனித அந்தோனியார் வீதி | முடிவு | 0.14 | 2 | 19 |
| 2 | 167 | சுவாமியார் ஒழுங்கை | சுவாமியார் வீதி | கடற்கரை வீதி | 0.4 | 3 | 18 |
| 3 | 168 | மத்திய கிழக்கு வீதி 1ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.25 | 3 | 27 |
| 4 | 169 | மத்திய கிழக்கு வீதி 2ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.27 | 3 | 27 |
| 5 | 170 | மத்திய கிழக்கு வீதி 3ம் குறுக்கு | வீடுகள் | முடிவு | 0.27 | 3.3 | 27 |
| 6 | 171 | சிப்பித்தறை ஒழுங்கை | தண்ணீர்த்தாங்கி வீதி | முடிவு | 0.2 | 3 | 27 |
| 7 | 172 | தொழில்நுட்பக் கல்லூரி ஒழுங்கை | கடற்கரை வீதி | தொழில்நுட்பக் கல்லூரி | 0.13 | 3.4 | 22 |
| 8 | 173 | துண்டி மயான வீதி | கடற்கரை வீதி | முடிவு | 0.1 | 2.7 | 18 |
| 9 | 174 | மகேந்திரபுரம் ஒழுங்கை | கடற்கரை வீதி | முடிவு | 0.2 | 2.4 | 18 |
| 10 | 175 | எழிலூர் ஒழுங்கை | கடற்கரை வீதி | முடிவு | 0.2 | 3 | 18 |
| 11 | 273 | நல்லலக்சுமி வழி | கோவில் வீதி | முடிவு | 0.25 | 2.4 | 4 |
| 12 | 274 | மணியோசை ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.12 | 2.3 | 4 |
| 13 | 275 | இராஜேஸ்வரி அம்மன் ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.2 | 2.8 | 4 |
| 14 | 276 | கந்தன்கருணை ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.34 | 3 | 4 |
| 15 | 277 | பண்டாரக்குளம் 1ம் ஒழுங்கை | பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை | முடிவு | 0.2 | 2.6 | 4 |
| 16 | 278 | சங்கிலியன் 1ம் ஒழுங்கை | சங்கிலியன் வீதி | பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை | 0.15 | 3 | 4 |
| 17 | 279 | பிராமணக்கட்டு ஒழுங்கை | கோவில் வீதி | முடிவு | 0.21 | 3.7 | 4 |
| 18 | 280 | அச்சுக்கூட ஒழுங்கை | அச்சுக்கூட வீதி | முடிவு | 0.17 | 2.4 | 21 |
| 19 | 281 | மத்தியூஸ் ஒழுங்கை | மத்தியூஸ் வீதி | இராஜசிங்கம் வீதி | 0.22 | 2.6 | 21 |
| 20 | 282 | நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதி | நெடுங்குளம் வீதி | முடிவு | 0.78 | 3.2 | 18 |
| 21 | 283 | வசந்தபுரம் 1ம் குறுக்கு | கடற்கரை வீதி | முடிவு | 0.23 | 2.5 | 18 |
| 22 | 284 | வசந்தபுரம் 2ம் குறுக்கு | கடற்கரை வீதி | முடிவு | 0.15 | 2.4 | 18 |
| 23 | 285 | தேவரிக்குளம் வீதி | கோவில் வீதி | கன்னியாஸ்திரி மட வீதி | 0.32 | 2.4 | 24 |
| 24 | 286 | பண்டாரக்குளம் பிள்ளையார் ஒழுங்கை | சங்கிலியன் வீதி | முடிவு | 0.21 | 3 | 4 |
| 25 | 287 | மணிப்புரி வீதி | கொழும்புத்துறை வீதி | புகையிரத பாதை | 0.9 | 3.8 | 18 |
| 26 | 288 | மனோன்மணி அம்மன் வீதி | கோவில் வீதி | முடிவு | 0.2 | 2.5 | 4 |
| 27 | 333 | வெட்டுக்குளம் வீதி | புவனேஸ்வரி அம்பாள் வீதி | முடிவு | 0.18 | 2.5 | 7 |
| 28 | 424 | ஏ.பி.சி. ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 0.43 | 6 | 5 |
| 29 | 425 | செட்டியார் தோட்டம் வீதி | ஏ.பி.சி. ஒழுங்கை | செம்மணி வீதி | 0.8 | 3 | 5 |
| 30 | 426 | குருநாதர் சுவாமி ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | முடிவு | 0.12 | 4 | 15 |
| 31 | 427 | செல்லர் ஒழுங்கை | பருத்தித்துறை வீதி | திருநெல்வேலி புது வீதி | 0.1 | 2.4 | 4 |
| 32 | 428 | மகேஸ்வரி வித்தியாலய வீதி | இராமநாதன் வீதி | அம்பாள் வீதி | 0.16 | 3.6 | 6 |
| 33 | 511 | ஆத்திசூடி வீதி | சேர் பொன் இராமநாதன் வீதி | பலாலி வீதி 5ம் ஒழுங்கை | 0.54 | 3 | 2 |
| 34 | 603 | தேவாலய ஒழுங்கை | பொன்னாலை வீதி | ஓட்டுமடம் வீதி | 0.35 | 2.4 | 9 |
| 35 | 648 | வைரவர் கோவில் ஒழுங்கை | சிவப்பிரகாசம் வீதி | முடிவு | 0.17 | 2.7 | 9 |
| 36 | 651 | உடையார் ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முடிவு | 0.06 | 4 | 9 |
| 37 | 652 | ஐயனார் ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முடிவு | 0.1 | 2.8 | 9 |
| 38 | 653 | மதவடி ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | சிவப்பிரகாசம் வீதி | 0.17 | 2.8 | 9 ,1 |
| 39 | 654 | நாச்சிமார் ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | தலையாளி ஒழுங்கை | 0.23 | 2.8 | 2 |
| 40 | 655 | தலையாளி வீதி | சேர் பொன் இராமநாதன் வீதி | சபாபதி ஒழுங்கை | 0.37 | 3 | 2 |
| 41 | 656 | தலையாளி ஒழுங்கை | காங்கேசன்துறை வீதி | தலையாளி வீதி | 0.3 | 3 | 2 |
| 42 | 657 | இராமநாதன் ஒழுங்கை | சேர் பொன் இராமநாதன் வீதி | தலையாளி வீதி | 0.27 | 3.2 | 2 |
| 43 | 658 | கலட்டி பிள்ளையார் ஒழுங்கை | சீனியர் ஒழுங்கை | சேர் பொன் இராமநாதன் வீதி | 0.21 | 2.8 | 2 |
| 44 | 659 | கலட்டி அம்மன் ஒழுங்கை | கலட்டி அம்மன் வீதி | கலட்டி பிள்ளையார் ஒழுங்கை | 0.2 | 3 | 2 |
| 45 | 660 | வயல்கரை ஒழுங்கை | ஐயனார் கோவில் வீதி | முருகமூர்த்தி வீதி | 0.66 | 2.8 | 9 .1 |
| 46 | 661 | இந்து ஆரம்ப பாடசாலை ஒழுங்கை | அரசடி வீதி | சிவகுருநாதன் வீதி | 0.18 | 3 | 9 |
| 47 | 662 | இலங்கைவேந்தன் ஒழுங்கை | கல்லூரி வீதி | சிவகுருநாதன் வீதி | 0.3 | 2.4 | 9 |
| 48 | 663 | கன்னாதிட்டி 2ம் ஒழுங்கை | கன்னாதிட்டி வீதி | முடிவு | 0.14 | 2.8 | 14 |
| 49 | 703 | கண்ணகை அம்மன் வீதி | அராலி வீதி | பொன்னாலை வீதி | 1 | 2.7 | 10 |
| 50 | 716 | அராலி வீதி 1ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.18 | 2.8 | 13 |
| 51 | 718 | அராலி வீதி 3ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.6 | 13 |
| 52 | 719 | அராலி வீதி 4ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.4 | 13 |
| 53 | 720 | அராலி வீதி 5ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.5 | 13 |
| 54 | 721 | அராலி வீதி 6ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.8 | 13 |
| 55 | 722 | அராலி வீதி 7ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.15 | 2.6 | 13 |
| 56 | 723 | அராலி வீதி 8ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.17 | 2.3 | 13 |
| 57 | 724 | அராலி வீதி 9ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.19 | 2.2 | 11,13 |
| 58 | 725 | அராலி வீதி 10ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.05 | 3 | 11 |
| 59 | 726 | அராலி வீதி 11ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.09 | 2.1 | 11 |
| 60 | 727 | அராலி வீதி 12ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.1 | 11 |
| 61 | 728 | அராலி வீதி 13ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.1 | 11 |
| 62 | 729 | அராலி வீதி 14ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.04 | 2 | 11 |
| 63 | 730 | அராலி வீதி 15ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.08 | 3.2 | 11 |
| 64 | 731 | அராலி வீதி 16ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.5 | 11 |
| 65 | 732 | அராலி வீதி 17ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.04 | 2.8 | 11 |
| 66 | 733 | அராலி வீதி 18ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.02 | 4.5 | 11 |
| 67 | 734 | அராலி வீதி 19ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.02 | 4 | 11 |
| 68 | 735 | அராலி வீதி 20ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.06 | 3 | 11 |
| 69 | 736 | அராலி வீதி 21ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 4 | 11 |
| 70 | 737 | அராலி வீதி 22ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.2 | 2.5 | 11 |
| 71 | 738 | அராலி வீதி 23ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.4 | 11 |
| 72 | 739 | அராலி வீதி 24ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.4 | 11 |
| 73 | 740 | அராலி வீதி 25ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.1 | 2.4 | 10 |
| 74 | 741 | அராலி வீதி 26ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.14 | 2.3 | 10 |
| 75 | 742 | அராலி வீதி 27ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.3 | 2.5 | 10 |
| 76 | 743 | அராலி வீதி 28ம் குறுக்கு | அராலி வீதி | முடிவு | 0.17 | 2.6 | 10 |
| 77 | 824 | மணிபிட்டி ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 0.18 | 3 | 11. 12 |
| 78 | 825 | கண்ணாபுரம் 1ம் ஒழுங்கை | கண்ணாபுரம் ஒழுங்கை | முடிவு | 0.84 | 3 | 12 |
| 79 | 826 | சோலபுரம் வீட்டுத்திட்ட ஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 0.6 | 2.8 | 25 |
| 80 | 827 | பண்ணை நெஞ்சு சிகிச்சை வைத்தியசாலைஒழுங்கை | காரைநகர் வீதி | முடிவு | 0.19 | 2.5 | 25 |
| 81 | 828 | தம்பிராசா ஒழுங்கை | காக்கைதீவு வீதி | ஆனைக்கோட்டை பழம் வீதி | 0.21 | 3 | 10 |
| 82 | 932 | கோணாந்தோட்டம் வீதி | பொன்னாலை வீதி | ஆஸ்பத்திரி வீதி | 0.38 | 3.3 | 25 |
| 83 | 933 | ஆரியகுளம் ஒழுங்கை | ஸ்ரான்லி வீதி | முடிவு | 0.15 | 2.4 | 15 |
| 84 | 934 | இராசாவின்தோட்டம் வைரவர் கோவில் வீதி | இராசாவின் தோட்டம் வீதி | முடிவு | 0.14 | 2.4 | 15 |
| 85 | 935 | றக்கா வீட்டுத்திட்ட ஒழுங்கை | றக்கா வீதி | முடிவு | 0.19 | 2.5 | 16 |
| 86 | 1032 | தியாகி ஒழுங்கை | நாவலர் வீதி | செட்டித் தெரு ஒழுங்கை | 0.16 | 2.5 | 4 |
| 87 | 1035 | பாணான்குளம் ஒழுங்கை | கச்சேரி நல்லூர் வீதி | நல்லூர் குறுக்குத் தெரு | 0.21 | 3 | 5 |
| 88 | 1036 | ஆசீர்வாதப்பர் ஒழுங்கை | ஆசீர்வாதப்பர் வீதி | கலைமகள் வீதி | 0.14 | 1.5 | 7 |

## மரண அறிவித்தல்



## எகதீஸ்வரி செல்வராஜா

யாழ். சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எகதீஸ்வரி செல்வராஜா அவர்கள் 25-02-2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பூமணி சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனியர் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வராஜாவின் ஆருயிர் மனைவியும், ஈசன் (கனடா), பாமா(கனடா), சசி (சுவிஸ்), காலஞ்சென்ற மங்கை, ஆனந்தி (இலங்கை), வாசுகி (சுகி- இலங்கை), தாஸ் (கனடா), மயூரன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாமினி, கருணா,சிவா (வயறிங்), சித்திராங்கி, முருகையா, கனகராசா, பாலசுப்பிரமணியம், தங்க ரத்தினம், தேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜதுசன், ஜனுஷா, கவின் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், விதுசன், றஜின், ஹரிஸ், அரிஸ் ஆகியோரின் அன்புப் பெரிய அத்தையும் ஆவார்.

**பார்வைக்கு** -Sunday, 01 Mar 2020 5:00 PM - 9:00 PMMonday, 02 Mar 2020 9:00 AM - 11:00 AM Chapel Ridge Funeral Home & Cremation Centre8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

**கிரியை** - Monday, 02 Mar 2020 11:00 AM - 1:00 PMChapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

**தகனம்:**Monday, 02 Mar 2020 2:00 PM Highland Hills Funeral Home and Cemetery12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேதர்ஸ் லேன், மானிப்பாய்**
**(அந்தோனியார் கோவிலடி அருகில்)**

**தகவல்:- குடும்பத்தினர்.**
**077 994 6285, 077 623 8977**
**+16477408181**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் புள்ளிவிபரக்கிளையில்
புள்ளிவிபர உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**கி. உதயமூர்த்தி** அவர்களின் பாசமிகு தாயார்

### கிருஸ்ணமூர்த்தி சிவபாக்கியம்

அவர்கள் நேற்று (27.02.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
29 . 05 . 1984



இறப்பு
03 . 03 . 2017

"சின்னத்துரை சிற்பாலயம்" உரிமையாளர் நந்தகுமாரின் மனைவி

### திருமதி லக்ஷி நந்தகுமார்

திதி: மாசிமாத பூர்வபட்ச பஞ்சமி
(28.02.2020 வெள்ளிக்கிழமை)

எங்கிருக்கிறாய் அன்னையே...!
ஆண்டுகள் பல ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது.
உண்மைதானா இது வென்று எம் உள்ளுணர்வு மறுக்கின்றது
கண்மூடி திறப்பதற்குள் எல்லாம் கனவுபோல் தான் தெரிகின்றது
கனவாகி விடாதா என்றும் எம் நனவு மனம் ஏங்குகின்றது.
மறக்கவும் முடியவில்லை உன்னை மனதில் மறைக்கவும் முடியவில்லை
தொடர்கின்றது நம் போராட்டம் உன் நினைவு விழுதுகளையும் சுமந்தபடி
விழுதுகள் விருட்சமாகி உன் நிழலை நியப்படுத்தும்
மனாங்கலங்காதே நீயும் அமைதி கொள் பண்டைத்தவன் படி அளப்பான் என்றோ..


**சின்னத்துரை சிற்பாலயம்**
**118 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**077 677 9314, 077 616 8761**

# மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி சிவகுமாரன்

(உரிமையாளர் - கற்பக சிவசோதி அரிசி ஆலை - இணுவில்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவகுமாரன் 22.02.2020 சனிக்கிழமை அன்று கனடா Montreal இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு ம்கனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபா அவர்களின் அன்புக் கணவரும், பத்மாவதி (சாந்தா), நித்தியானந்தபவானி (சாரதா), சித்தானந்தபவானி (சந்திரா), சோமேஸ்வரி (சோமு), சோமறஞ்சினி (சாந்தினி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பவன் மற்றும் கீதா, உமேஸ்வரன், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், வாமதேவன் மற்றும் செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மாதினி, பாலன், சிவநந்தினி (சிவா) ஆகியோரின் அன்புச் சகலனும், சிவாஜினி, செல்வநந்தினி, கஜானன், ஸ்ரீரூபி, ஸ்ரீகோவர்த்தனி, மயூராஜினி, சிவதர்சினி, கஜன், வேதகி, சுதர்சினி, உமைபாலன், விஸ்ணுராஜ், கோபிகன், கோபிறாம், சனாதனி, லக்ஷிகாயினி, மனோஷன், வினோஜி, செல்வன்ஜா, ஷேவித், வேணுகாசினி, கோபிசன், சுவர்ணபவன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.02.2020) சனிக்கிழமை 55 Rue Gince, Montreal QC,H4N 1J7 இல் அமைந்துள்ள AETERNA Funeral Home இல் மாலை கனடா நேரப்படி 5.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் 01.03.2020 காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கற்பக பிள்ளையார் கோயிலடி,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**பிறப்பு**
**04.10.1956**

**இறப்பு**
**22.02.2020**

தொடர்புகளுக்கு:
பிரபா (மனைவி - +151 4278 2038)
சாந்தினி (சகோதரி - +442 0871 58073
உமேஸ் (மைத்துனர் - +947 7525 0955

## வாடிக்கையாளர்களுக்கு

**K.K.S Road 350 இல்**
அமைந்துள்ள
**விஷ்ணுபவன் சைவஉணவகம்**
இன்று முதல் (28.02.2020)
வெள்ளிக்கிழமை வழமைபோல்
7.00 மணிக்கு
திறக்கப்பட உள்ளது.

**தொடர்பு - 077 820 5073**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
**திருமதி பத்மஜா பாஸ்கரக் குருக்கள்**
(B.com,PGDE,M.A(Dev.Studies),M.Ed)

கடந்த 06.02.2020 ஆம் திகதி கொழும்பு BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி ( M.Ed )ப் பட்டம் பெற்றமையைப் பாராட்டுவதோடு மேலும் பல்துறைத் திறன்கள் வளர்த்து வாண்மைமிகு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்**
**வண்ணார்பண்ணை.**


## இணுவில் கந்தசுவாமி கோவில்
### புதிய நிர்வாகசபை தெரிவு

மேற்படி தெரிவு உடுவில் பிரதேச செயலர் மேற்பார்வையில் நடைபெறும் அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்து தங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**காலம் :** 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை
மாலை 3.00 மணி

**இடம் :** இணுவில் கந்தசுவாமி கோவில்
இளம் தொண்டர் சபை கலாச்சார மண்டபம்

-செயலாளர்-

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான கடைகளுக்கான ஒப்பந்தம் தொடர்பானது.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான கடைகளுக்கான ஒப்பந்த விதிகளை மீறி ஒப்பந்தகாரர்கள் உப ஒப்பந்தம் செய்வதோ அல்லது கைமாற்றம் செய்வதோ தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு கைமாற்றம் செய்வது சட்டரீதியற்றது. உப ஒப்பந்தம் மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

நகராட்சிமன்றம்
திருமதி சிவமங்கை இராமநாதன்
தவிசாளர்
சாவகச்சேரி
28.02.2020

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 14.03.2020 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 - 12.00 மணிவரை கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது வருகைதந்து கல்லூரியின் அபிவிருத்திப் பணிக்கு ஒத்துழைப்பினை வழங்கவும்.

**நிகழ்ச்சி நிரல்**

→ இறை வணக்கம்
→ தலைமை உரை
→ செயற்பாட்டறிக்கை
→ வரவு செலவு அறிக்கை
→ வலயப் பிரதிநிதியின் உரை
→ புதிய நிர்வாகத் தெரிவு
→ வரவு செலவுத் திட்ட முன்மொழிவு
→ நன்றியுரை.

**அதிபர்.**

*சடலம்...*

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கலைமதி கிந்துப்பிட்டி மாயானத்தில் சடலமொன்றை எரியூட்டுவது நேற்றுப் பெரும் களேபரத்தில் முடிந்தது. குறித்த சடலத்தை எரியூட்டத் தயாரான நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல நூற்றுக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

நீண்ட நேரமாகியும் இரு தரப்பினருக்கும் இடையில் எந்த முடிவும் எட்டப்படாததை அடுத்து, அச்சுவேலிப் பொலிஸார் இரு தரப்பின் பிரதிநிதிகளுடன் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலையாகினர். விடயத்தை ஆராய்ந்த நீதிபதி சடலத்தை பிறிதொரு மயானத்தில் எரியூட்டுமாறும் அறிவுறுத்தினார்.

சடலத்தை எரிப்பதைத் தடுத்த பெண்ணொருவர் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மயானத்துக்கு சடலத்தை எரிப்பதற்கு விறகு ஏற்றிச்சென்ற லான்ட்மாஸ்டர் சாரதியைத் தாக்கியமை, லான்ட்மாஸ்டரைச் சேதப்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

**பின்னணி**

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்றுமாறு மயானத்துக்கு அருகில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். அந்த மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் 2017ஆம் ஆண்டு அனுமதியளித்திருந்தது. இதேவேளை, 2017ஆம் ஆண்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மயானத்தை சூழவுள்ள மக்கள் சார்பில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் எதிர்மனுதாரர்களாக கிந்துப்பிட்டி மயான நிர்வாகம், அச்சுவேலி பொலிஸார் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டனர். அந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது அந்த மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. இந்தச் சீராய்வு மனு மீதான விசாரணை சுமார் இரண்டு வருடங்களாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. மனு மீதான இறுதிக் கட்டளை கடந்த நவம்பர் 8ஆம் திகதி வழங்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வழங்கிய கட்டளையை ரத்துச் செய்து கட்டளையிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சீராய்வு மனுவையும் தள்ளுபடி செய்தார்.

இந்த நிலையில் கிந்துப்பிட்டி இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்குஅனுமதிகோரும் தரப்பு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் அணைத்து தமது விண்ணப் பத்தை மன்றில் கடந்த நவம்பர் மாதம் முன்வைத்த னர்.

'மயானத்தைச் சுற்றி மதில் அமைத்து சடலங்களை அங்கு எரியூட்ட முடியும். அதனை எதிர்த்தரப்புத் தடுக்க முடியாது. அங்கு குழப்பம் விளைவித்தாலோ மதிலை உடைத்து அத்துமீறினாலோ அந்தத் தரப்புக்கு எதிராக பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-26)


## Account Clerk தேவை

பிரபல்யமான நிறுவனம் ஒன்றுக்கு
**Account Clerk** தேவை.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 0777 286 069**



## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1995 இல் பிறந்த விசாகம் 4 ஆம் பாதம் 6 ½ கிரகபாவம் உடைய அரச தொழில்புரியும் (சேவையர்) மணமகனுக்கு மணமகள் தேவை.
(ஆதிசைவம் விரும்பத்தக்கது)

**077 586 1147**












## இந்திய துணைத் தூதரகம்
### யாழ்ப்பாணம்.

**கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு கொன்சிலர் சேவைகளை வழங்கல்**

இந்திய யாழ்ப்பாண தூதரக குழு பின்வரும் நாளில் பொதுமக்களை கிளிநொச்சி மாவட்டத்தில் நேரடியாக சந்தித்து இந்திய வீசா, கொன்சிலர் சேவைகள் மற்றும் புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களையும் பிரச்சினைகளையும் கேட்டு அறிந்து தீர்த்து வைக்க வருகின்றது. பொதுமக்கள் இக்குழுவை முன்பதிவின்றி சந்தித்து தீர்வுகளை பெற்றுக்கொள்ளலாம்.

- **நாள் :** 29.02.2020
- **இடம் :** **AKR Hotel** கரடிபோக்கு சந்தி அருகில், கிளிநொச்சி.
- **நேரம் :** மு.ப. 09.30 - 12.30 மணி
- **தொலைபேசி இலக்கம் : 077 323 8986**

**மேலதிக தகவல்களுக்கு:** **தொலைபேசி இலக்கம்: 021 222 0505/04**
**மின்னஞ்சல் :** cons.jaffna@mea.gov.in

(in.12682) (13.17)

# அடக்குமுறை அரசு

## சாடுகின்றார் காவிந்த

**கொழும்பு, பெப்.28**

**அரசு அதன் ஆட்சிகாலம் முடியும் வரை மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது என்பது அதன் தற்போதைய செயற்பாடுகளின் மூலம் தெரியவந்துள்ளது.**

**இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய அரசு தமது அடக்குமுறை ஆட்சியை வெளிப்படுத்தி வருகின்றது. அதேவேளை சூரியவெவ விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற விளையாட்டை பார்வையிடசென்றவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது ஆட்சிகாலம் முடியும் வரை மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாங்கமாகவே தற்போதைய அரசு இருக்கப் போகின்றது என்பது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளின் போது தமது வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றிப் பெற்றதை அடுத்து மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதாக குறிப்பிட்ட அரச தரப்பினர் தற்போது நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக தெரிவித்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் போக்கை பார்க்கையில் நாடாளுமன்ற தேர்தலை அடுத்து மாகாணசபை தேர்தல் என்றும் பின்னர் பிரதேசசபை தேர்தல் என்றும் கூறிக்கொண்டு தமது வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாது காலங்கடத்துவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசென்றால் தாம் ஆட்சிக்கு வந்து 102 நாள்கள் கடந்துள்ள நிலையில் ஒரு வாக்குறுதியையேனும் நிறைவேற்றிருக்கும் அல்லவா?.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலக்கட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட அதே ஆட்சி முறைதான் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோரை பொலிஸார் தாக்கியிருந்தனர்.

சாதாரணமாக பெண் குற்றவாளியொருவரை ஆண் பொலிஸார் கைது செய்யக்கூட அனுமதி இல்லாத நிலையில், ஆண் பொலிஸார் பெண்களைத் தாக்கியிருந்தனர். இதனால் நாட்டுக்கு ஏற்பட்ட அவப்பெயரை யாராவது பொறுப்பேற்க வேண்டும். - என்றார். (எ)

## ஒன்றுகூடல்

"ஒருமித்த கருத்தும் ஒருமித்த பயணமும்" என்னும் தொனிப்பொருளில் புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னரான தமிழர் அரசியல் செல்நெறி தொடர்பான விமர்சனங்களுக்கான பதிலுரை ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 2.59 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சிவில் சமூக பிரதிநிதிகளின் விமர்சனங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் பதிலுரைக்கவுள்ளார்.

தொடக்கவுரையை அரசியல் விமர்சன பத்தியாளர் புருசோத்தமன் தங்கமயில் நிகழ்த்த, விமர்சன உரைகளை பொறியியலாளர் ம.சூரியசேகரம், முழங்காவில் பங்குத் தந்தை அருட்பணி சி.சு.ஜெயக்குமார் அடிகள், மூத்த ஊடகவியாளர் வீ.தனபாலசிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ-135)

## சடலம் மீட்பு

கொழும்பு, பெப்.28

மஸ்கெலியா சாமிமலை ஓயாவிலிருந்து ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தை சேர்ந்த சிலர் நேற்றுக் காலை 10 மணியளவில் குறித்த ஆற்றுக்கு நீராடச் சென்றபோது ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு மஸ்கெலியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற மஸ்கெலியா பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தின் ராணித் தோட்டத்தில் வசித்து வந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சூரியகுமார் என்பவேரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)



## உடையார்கட்டுக் குளத்தின் கீழ்

# 1,235 ஏக்கரில் விதைக்க முடிவு

முல்லைத்தீவு, பெப். 28

முல்லைத்தீவு உடையார்கட்டுக் குளத்தின்கீழ் ஆயிரத்து 235 ஏக்கரில் நெற்செய்கையில் ஈடுபட நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டுக் குளத்தின் கீழான 2020 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை தொடர்பான விவசாயிகள் கூட்டம் உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி, விதைப்பு ஆரம்பம் எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சேற்று விதைப்பாக பயிர்ச்செய்கை செய்வதற்கு விவசாயிகள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

மூன்று மற்றும் மூன்றரை மாத காலங்களைக்கொண்ட நெல் இனங்களைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தத் தீர்மானித்ததுடன் விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கை தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. வைக்கோலை மீண்டும் வயலுக்குப் பயன்படுத்தல் சரியான பசளைப் பிரயோகம் தொடர்பில் விவசாயிகளுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது.

கூட்டத்தில், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆர்.இராகுலன், நீர்ப்பாசன திணைக்களத்தைச் சேர்ந்த ஆர்.இராஜகாந்தன், தொழில் நுட்ப அலுவலர் கே.கோபிநாத், கமநல அபிவிருத்தி அலுவலர் சி.பிரபாகரன், பாடவிதான அலுவலர் பு.நிரோஜன், விவசாயப் போதனாசிரியர் டி.குணராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுப்பு

முல்லைத்தீவு, பெப். 28

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கெருடமடு, மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன், மணல் கொள்ளையர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த அச்சுறுத்தல் செயற்பாடானது, புதுக்குடியிருப்புபிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட வசந்தபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் சட்டவிரோத மண்ணகழ்வுச் செயற்பாடு தொடர்பில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளரின் ஒளிப்படக் கருவியை, மணற்கொள்ளையர்கள் கைகளால் தள்ளியதுடன், ஒளிப்படம் எடுக்கவேண்டாம் எனக்கூறி அச்சுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-246)

## மேசையில் இருந்து விழுந்து ஆறு மாதக் குழந்தை சாவு

புத்தளம் நவத்தேகமமஹமெத்தேவ பிரதேசத்தில் ஆறு மாதக் குழந்தையொன்று மேசையிலிருந்து தவறி விழுந்து நேற்று உயிரிழந்துள்ளது.

குழந்தை நவத்தேகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனுஜதாம்ஷ என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளான். சம்பவம் இடம்பெற்றபோது குழந்தையின் தாய் வீட்டில் இல்லை. சில சிறுவர்கள் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தபோதே குழந்தை கீழே விழுந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குழந்தையின் தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இலங்கை...

வருவதாவது
மன்னாரில் இருந்து சென்ற மீனவர்கள் 5 பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.
அப்போது சர்வதேசக் கடல் எல்லையில் உலங்குவானூர்தியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்களைக் கைது செய்தனர்.
பின்னர் குறித்த மீனவர்களையும், அவர்களது படகையும் இராமேஸ்வரம் மெரைன் பொலிஸாரிடம் இந்தியக் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ம-105,ரி1)

## பேரனைத்...

தார். செல்வம் சிவபாக்கியம் என்பவரே உயிரிழந்தவராவார்.
முகமாலையை பிறப்பிடமாகவும் மந்துவில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவை வதிவிடமாகவும் கொண்ட செல்வம் சிவபாக்கியத்தின் மகளின் மகனான அல்பிரட் தினு என்பவர் 2009ஆம் ஆண்டு இறுதிப்போரில் வட்டுவாகல் பகுதியில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டார்.
அவர் தொடர்பான நிலைமையை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் பெண் போராடி வந்தார். இந்த நிலையில் சுகவீனம் காரணமாக நேற்று அவர் உயிரிழந்தார். (ம-246)

## லீசிங்...

கொலை செய்துகொண்டார்.
சுவிதன் அனுசியா (வயது- 34) என்ற குறித்த பெண் லீசிங் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார். தவணைப் பணம் கட்டப்படாததை அடுத்து லீசிங் வழங்கிய நிறுவனத்தினர் அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். பதிலுக்குப் பெண்ணும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று தெரியவருகின்றது. இதையடுத்து சிறிது நேரத்தில் பெண் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார். இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு

சுன்னாகம் ,பெப்.28
சுன்னாகம் உடுவில் குபேரகா கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற, கலைநிகழ்வில் கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கடந்த சிவராத்திரி தினத்தன்று கலையகத்தின் நிர்வாக இயக்குநர் சின்னக்கலைஞர் மகேந்திரராசா ரவிசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதமவிருந்தினராக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ,சிறப்பு விருந்தினர்களாக யாழ்;. மாவட்ட மேலதிக அரச அதிபர் ம. பிரதீபன், யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரியான பேராசிரியர் கே.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி; சி.ஐ.எஸ்.கே.கருணபால, யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார், சத்தியபுரம் தூய பவுல் ஆலயத்தின் சேகரக்குரு வண.ஈனோக் புனிதராஜா, ,உடுவில் நல்லாயன் ஆலய சேகரக்குரு வண.மா.ஜெயானந்தராஜா, உடுவில் கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி நரேந்திரா, உடுவில் கலாசார உத்தியோகத்தர் சி.சிவராஜ், வட இலங்கை சமாதான நீதிவான் சங்கத்தின் தலைவர் பீதாம்பரம் ஜெயவிந்தன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் யாழ்மாவட்ட மேலதிக மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் சேவைச் செம்மல் என்ற விருதும், பேராசிரியர் கே.கந்தசாமி சமூகசித்தி என்ற விருதும், கலையகத்தின் நிர்வாக இயக்குனரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து 60 கலைஞர்களுக்கு இளம் கலைஜோதி விருதும், 20 சமூகசேவகருக்கு சமூகஜோதி என்ற விருதும் சிறப்பு விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ந)




# காலையும் மாலையும் 20 நிமிடங்கள் கவனம்!

### பொதுமக்கள் மற்றும் சபைக்கு அறிவுறுத்து

*சாவகச்சேரி, பெப். 28*
*வீதி மின்குமிழ்களை சூரியன் மறைந்து 20 நிமிடங்களின் பின்னர் ஒளிரவிடுமாறும், அவ்வாறே, சூரியன் உதிப்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னரே அணைத்துவிடுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களையும் உள்ளூராட்சி சபைகளையும் அறிவுறுத்தியுள்ளது.*

உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களின் நலன்கருதி வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தியுள்ளன.
ஆனால் பல வீதிகளில் பகல் முழுவதும் மின்விளக்குகள் ஒளிர்கின்றன. இதனால் மின்சாரம் வீணடிக்கப்படுகின்றது.
இந்தநிலையில், இதுபற்றி வளிமண்டலவியல் திணைக்களம் உள்ளூராட்சி சபைகளுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது.
அதில் மேற்குறித்த நேர விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
வீதிகளுக்கு வெளிச்சமூட்ட பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் தேவையற்ற நேரங்களில் ஒளிர்வதால் மின்சக்தி விரயமாகிறது. இதனைத் தடுப்பதற்காக இந்த வருடம் சூரியன் உதிக்கும் மற்றும் மறையும் நேரங்கள் உள்ளடக்கிய பட்டியல் வளிமண்டலவியல் திணைக்களத் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம், சாதாரணமாக இருள் சூழும் மற்றும் வைகறைப் பொழுதில் கருத்திற் கொள்ளக்கூடியளவு வெளிச்சம் காணப்படும். எனவே, மின்குமிழ்களை சூரியன் மறைந்து 20 நிமிடங்களின் பின்னர் ஒளிரவிடுங்கள். அவ்வாறே சூரியன் உதிப்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னரே மின்குமிழ்கள் ஒளிர்வதை நிறுத்திவிடுமாறும் அறிவுறுத்தியுள்ளது.
உள்ளூராட்சி சபைகள் இவற்றைக் கருத்திற்கொண்டு மின்விளக்குகள் ஒளிரவிடுதல் மற்றும் அணைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கவனம் செலுத்திச் செயற்படவேண்டும் என்றும் யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மு.சுலோச்சனா அறிவித்துள்ளார். (த-9)

## கஞ்சாவுடன் நால்வர் கைது

யாழ்ப்பாணம், பெப். 28
கீரிமலையில் 500 கிராம் கஞ்சாவுடன் நால்வர் , சிறப்பு அதிரடிப் படையால் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.
கைதான நால்வரில் இருவர் கீரிமலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இருவர் இளவாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். நால்வரும் காங்கேசன்துறை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டனர். (ம-26)

# பெறுபேறுகள் தாமதமாவதற்கு கணினி மயப்படாமை காரணம்

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பீடாதிபதிகள் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாவதற்கு பரீட்சைக் கிளை கணினி மயப்படுத்தப்படாமையே காரணம் என்று பேரவைக் கூட்டத்தில் பீடாதிபதிகள் தெரிவித்தனர்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பதவி ஏற்றதன் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு நியமிக்கப்பட்ட புதிய பேரவையின் முதலாவது கூட்டத்திலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. புதிய பேரவையின் அறிமுகக் கூட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நேற்று இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தின் போது, மாணவர்களின் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் மிக நீண்டகால தாமதம் ஏற்படுவதனால், பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பேரவை உறுப்பினர் சுட்டிக்காட்டினார். இதன்போது இடம்பெற்ற வாதப் பிரதி வாதங்களின் போதே, பரீட்சைக் கிளை கணினி மயப்படுத்தப்படாததனாலேயே உரிய காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட முடியாத நிலை காணப்படுகிறது என பீடாதிபதிகளின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பரீட்சை நடந்த காலப்பகுதி, விடைத்தாள்கள் திருத்திக் கையளிக்கப்பட்ட காலப்பகுதி, பெறுபேறுகளை வெளியிட எடுத்த காலப்பகுதி போன்ற விவரங்களைப் பெற்று, இனிவரும் காலங்களில் பரீட்சைப் பெறுபேறுகளை இயலுமான வரை காலதாமதமின்றி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி பேரவைக்கு உறுதியளித்தார். (ம)

## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசதுரை

(முன்னாள் இ.போ.ச நடத்துனர்)


பிறப்பு 25.01.1938 இறப்பு 27.02.2020

ஏழாலை மத்தி ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசதுரை நேற்று (27.02.2020) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மீனாட்சி தம்பதிகளின் ஏக புதல்வனும் இராசமணியின் (மணிஅக்கா) அன்புக்கணவரும் உதயகுமார் (டென்மார்க்), காலஞ்சென்ற சிவகுமார், செல்வகுமார் (யாழ் இந்துக்கல்லூரியின் ஆசிரியரும் 36 ஆவது தேசிய படையணியின் நிர்வாக அதிகாரியும்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தினி (டென்மார்க்), தக்சாயினி (காலசார உத்தியோகத்தர் -பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமனாரும் ஓவியா, நவீனா, தேனுஜா, ஆராதனன், ஆருக்சா, அக்ஷரா ஆகியோரின் பேரனும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற கனகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.02.2020 பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

071 856 1117, 021 221 3834
தகவல்: குடும்பத்தினர்
இ.செல்வகுமார் (மகன்)



# போராட்டம் நியாயமானதே!

■ கே.எஸ்.சிவஞானராஜா

ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு வலியுறுத்தி கடந்த புதன்கிழமை ஆசிரியர்களும், அதிபர்களும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டமையின் பிரகாரம், சட்டப்படி தந்தி மூலம் பாடசாலைகளுக்கு சுகவீன விடுமுறை என்று அறிவிக்க வேண்டிய தேவை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டது.

ஆசிரியர்கள் படும் பாட்டை எவருமே குறைத்து மதிப்பீடு செய்தலாகாது. இலங்கையில் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கிணையாக எவரையுமே எடைபோட முடியாது. எத்தனையோ ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் ஆறு மணித்தியாலம் கற்பித்துக் கொண்டு, மேலதிகமாகக் கற்பிற்கும் சேவையையும் பரிகாரமாகச் செய்கின்றார்கள். அதைவிட மேலதிகமாகவும் பாடசாலைக் கடமையையும் ஆற்றுகிறார்கள்.

ஒரு சிலர் விதிவிலக்காக அமைந்தாலும் 19.5 சதவீதமானவர்களுக்கு பேராசிரியர்கள் போல் மாத சம்பளமாகக் கொடுத்தாலும் புண்ணியமாகும். இதைவிட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு இதைவிட அதிக சம்பளம் கொடுத்தால் தான் நாடு முன்னேறும். எனவே சம்பள அதிகரிப்புக்காகப் போராடுவது நியாயமானதே!

# பயண நெருக்கடி தீருமா?

■ நா. கோபாலகிருஷ்ணன்

> இந்துக்களின் அதிவிசேட தினங்களிலும் பூரணை, செவ்வாய், வெள்ளி தினங்களிலும் பெருந் தொகையான இந்துக்கள் நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகை தருகின்றனர்.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் பெருந்தொகையாகப் பிரயாணத்தை மேற்கொள்கின்ற பாதையாக யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இடையேயான பிரயாணம் அமைந்து விட்டது. ஆன்மிக வழிபாட்டாளர்களுக்குச் சமமாகச் சுற்றுலாப்பயணிகளும் அலை மோதுகின்றனர். முன்னைய காலங்களில் நயினாதீவுக்கான பிரயாணம் இந்து, பௌத்த யாத்திரிகர்களால் மேற்கொள்ளப்பட்டது. தற்காலப் பகுதியில் உள்நாட்டவர், வெளிநாட்டவர்கள் என இனமத வேறுபாடின்றி மேற்படி பாதையால் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். அதுவும் அரச விடுமுறை தினங்களில் பல நூற்றுக்கணக்கான பிரயாணிகள் நயினாதீவுக்கும், நெடுந்தீவுக்குமான பிரயாணத்தை யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் பாதை வழியாக மேற்கொள்கின்றனர்.




இந்துக்களின் அதிவிசேட தினங்களிலும் பூரணை, செவ்வாய், வெள்ளி தினங்களிலும் பெருந்தொகையான இந்துக்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகை தருகின்றனர். தமது நேர்த்திக் கடமைகளை முடித்து, நண்பகல் பூசைமுடிந்து மாலை யாழ்ப்பாணம் திரும்பும் அடியவர்கள் பஸ்களில் மூச்சுத் திணறி, திக்குமுக்காடி பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

குறிகாட்டுவான் துறையில் இருந்து கடைசி பஸ் மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்துக்குப் புறப்படுகிறது. நயினாதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பிரயாணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளும், நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பிரயாணத்தை மேற்கொள்கின்ற பிரயாணிகளும் ஒரு பஸ்ஸில் திணிக்கப்படு கின்றனர்.

2017 ஆம் ஆண்டில் மாலை 6 மணிக்கு ஒரு சேவையை இ.போ.ச பஸ் நடத்தி வந்தது. அச்சேவை நிறுத்தப்பட்டபடியால் 5.30 மணிக்கான பஸ்ஸில் பிரயாணத்தை மேற்கொள்ளவில்லையானால், யாழ்ப்பாணத்துக்கான பிரயாணத்தை மேற்கொள்ள முடியாது.

தற்போது நெடுந்தீவுக்கான சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளமையாலும் நயினாதீவுக்கான பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளமையாலும், தினமும் மாலை 5 மணி தொடக்கம் 5.30 மணி, 6 மணிக்கானபஸ்சேவைகுறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நடைபெறவேண்டியது அத்தியாவசிய தேவையாகும். தினமும் கடைசிச் சேவை மாலை 6 மணிக்கு நடைபெறவேண்டும். முக்கியமாக அரச விடுமுறை நாள்கள், செவ்வாய், வெள்ளி பூரணை தினங்களில் மேலதிக பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும். ■



# இப்படியும் ஒரு வைரஸா?

■ எஸ்.கணேஸ்

கொரோனா வைரஸ் பூமியின் வெப்ப வலயத்துக்கு அருகாமையிலும், அதிக சன அடர்த்தியும் கொண்ட இடத்தில் உருவாகியுள்ளதால், இது பலவற்றை எதிர்த்து தாக்குப்பிடிக்கக் கூடிய சக்தியுள்ளதாக இருக்கும். அத்துடன் இதனைக் கட்டுப்படுத்துவதும் மிகவும் கடினமான பணியே.

ரஸ்யாவின் கிழக்கு எல்லை, கொரியா, சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா இவற்றை உள்ளடக்கிய நேர் கோட்டுக்குக் கிழக்குப் புறம் பல மைல்கள் தூரத்துக்கு பசுபிக் சமுத்திரம் இருப்பதாலும், பூமியானது கிழக்குப் புறம் நோக்கியே அண்ணளவாக 1000 மைல் வேகத்தில் சுற்றுவதாலும், இந்த வைரஸானது கிழக்கு நோக்கி நகராது.

குறித்த நேர்கோட்டுக்கு மேற்குப்புறமாகவே நகரும். நகர்த்தப்படும். அத்துடன் இவற்றைக் கட்டுப்படுத்துவதில் மேலும் கடினமாக இருப்பின், ஆபிரிக்கா கண்டம், ஐரோப்பா கண்டம் இவற்றின் மேற்கு எல்லை வரை தானாக நகரும் வாய்ப்புக்களும் உண்டு.



இறைவனால் படைக்கப்பட்ட எல்லாவற்றுக்கும் (பூமி உட்பட) வளர்ச்சியும், அழிவும் உண்டு. இவையிரண்டுக்குமே நல்லதும், தீயதும் தேவைப்படுகின்றன. தெய்வங்களையே துன்பப்படுத்த யூதாசையும், இராவணனையும், அரக்கர்களையும் இறைவன் படைக்கவில்லையா? ஒன்றின் உருவாக்கத்துக்கும், அதன் அழிவுக்கும் இன்னொன்றின் உதவி தேவைப்படுகிறது. தீய காலத்தில் தீயவற்றின் செயற்பாடுகளே மேல் ஓங்கி நிற்கும்.

உலகில் காலநிலை மாறியுள்ளதும், முக்கியமாக புவி வெப்பம் கூடிவருவதும் இவ்வாறான வைரஸின் தோற்றமும் ஓர் அழிவை நோக்கிய பயணமா? ■

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெறும் காற்றில் முழம் போடுதல்

கௌரவர்களிடம் சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் வனவாசம் புகுந்த காலம். அவர்களைக் காண காட்டுக்குள் எப்போதாவது முனிவர்கள் வருவார்கள். ஒருநாள் முன்னிரவு கழிந்த பொழுதில் கிருஷ்ணனும், அவனோடு நூற்றுக்கும் மேற்பட்ட முனிவர்களும் பாண்டவர்களைக் காண வந்துவிட்டார்கள். வந்தவர்களுக்கோ கடும்பசி.

ஆனால் , அவர்களுக்கு உண்ணக் கொடுப்பதற்கு பாண்டவர்களின் குடிலில் எதுவுமிருக்கவில்லை. சில நாழிகைகளுக்கு முன்னர்தான் உணவுப் பாத்திரங்களைக் கழுவியிருந்தாள் திரௌபதி. அதனால் என்ன செய்வதென்று கையைப் பிசைந்தவாறு நின்றாள். வந்தவர்களுக்கு உணவளிக்காவிட்டால், அவர்களின் சாபத்துக்கு ஆளாக நேரிட்டுவிடுமே என்பது அவளின் அங்கலாய்ப்புக்கான காரணம்.

திரௌபதியின் முகவாட்டத்தைக் கண்டுவிட்ட கிருஷ்ணன் , மெதுவாக " என்ன கவலை திரௌபதி ?" என்று கேட்டான். குடிலில் உணவேதுமில்லை என்ற விடயத்தை அவள் சொன்னாள்.

"பரவாயில்லை, கழுவியிருக்கும் பாத்திரங்கள் எங்கே ?" என்று கேட்டான் கிருஷ்ணன். திரௌபதை உணவு சமைக்கும் பாத்திரத்தைக் கொண்டு வந்து கிருஷ்ணனிடம் கொடுத்தாள். அதனை வாங்கிப் பார்த்த கிருஷ்ணனின் கண்களில் , ஒரு மூலையில் ஒட்டியிருந்த சோற்றுப் பருக்கை தென்பட்டது. உடனேயே " இது போதுமே" என்று புன்னகைத்தபடியே , அந்தப் பருக்கையை எடுத்து உண்டான். என்ன அதிசயம், அந்தப் பருக்கையை கிருஷ்ணன் உண்டதுமே, அவனோடு வந்திருந்த அத்தனை முனிவர்களுக்கும் அறுசுவை விருந்தை உண்டது போல, பசியாறிய திருப்தி ஏற்பட்டது. பாண்டவர்களை வாழ்த்திவிட்டு அவர்கள் புறப்பட்டனர்.

ஒரு சோற்றுப்பருக்கையை மட்டும் வைத்துக் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட முனிவர்களின் பசியைப் போக்கிய கிருஷ்ணனின் மாயவித்தையைப் போல, தாமும் இந்தக் கலியுகத்தில் கையில் எதுவுமில்லாவிட்டாலும் அதிசயங்களை நிகழ்த்தலாம் என ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள் போலும். அதனால் தான் எந்தவித நிதி ஒதுக்கீடுமின்றி நாடாளவியரீதியில் சப்ரிகம என்னும் அபிவிருத்தித் திட்ட வேலைகளை நாளை ஆரம்பிக்கவுள்ளார்கள். கிட்டத்தட்ட வெறும் காற்றில் முழம்போடுவதைப் போன்றதே இது. ஏற்கனவே கடந்த நல்லாட்சி அரசில் செய்துமுடிக்கப்பட்ட கம்பரெலிய திட்டங்களுக்கான நிதியை இன்னும் சரிவரக் கொடுத்து முடிக்கவில்லை. அத்தோடு நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாமையால், அரசுக்கான நிதிமூலம் என்பது மிகச் சிக்கலானதாக மாறிவிட்டது. ஏனெனில் இப்போதும், நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் வசமே அதிக ஆசனங்கள் உள்ளன. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் அதிக ஆசனங்களைக் கைப்பற்றினால், இப்படி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல், திட்டமிட்டபடி வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, உரிய நிதி மூலத்தை அடையமுடியும்.

அப்படியானால் தேர்தலின் பின்னர் இந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தொடங்கலாம் தானே என்ற கேள்வி உங்கள் மூளைக்குள் குறுக்கும் மறுக்கும் ஓடித் திரியலாம். ஆனால் இப்போது தொடங்கினால்தான், அதைக் காட்டி வாக்கும் கேட்க முடியும். எத்தனை வீதிகளைப் புனரமைத்தோம், எத்தனை பாலங்களைக் கட்டினோம், எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தினோம் என விஜயகாந்த் போல புள்ளிவிபரங்களைச் சொல்லி, வ்ாக்குகளை அள்ள வேண்டுமானால், தேர்தலுக்கு முன்னதாக இந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டேயாக வேண்டும். மார்ச் முதல் வாரமே நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருப்பதால், அதற்கு முன்னதாக நாளையே இந்த சப்ரிகம திட்டங்களை அரசு ஆரம்பிக்கவுள்ளது.

ஆனால் கையில் திட்டங்களைப் பூர்த்தி செய்யப் போதுமான உரிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை. வெறுங்கையோடு போய் , திட்டங்களை ஆரம்பிப்பதாக பாவனை செய்துவிட்டு, "நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற வைத்தாலே அந்தத் திட்டங்களைப் பூர்த்தி செய்யமுடியும்" என்று கூவுவார்கள் . இதனால் ஆட்சியாளர்கள் மீது அபிமானம் இல்லாவிட்டாலும், அபிவிருத்தியைப் பூர்த்தி செய்யவாவது, தமது வாக்குகளை இவர்களுக்கே அளிக்க வேண்டிய நிலை மக்களுக்கு வந்துவிடும். அதை மனதில் வைத்தே காற்றில் முழம் போட்டு, காதில் பூச்சுற்றி, வாக்குகளுக்காக வித்தை காட்ட நினைக்கிறார்கள். ஆனாலும் இந்தப் பருப்பு வேகுமா இல்லையா என்பதை தேர்தல் முடிவுகள் தான் சொல்லவேண்டும்.

# பொறுப்புக் கூறுவோம்!

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்



கொழும்பு, பெப்.28
தீர்மானத்தில் இருந்து விலகினாலும் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசின் வேலைத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுப் பிரதமர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
போர்க் குற்றங்கள் நடந்துள்ளன என்று யாராவது தெரிவிப்பார்களாயின் அது தொடர்பில் எமது சட்ட வரைவுக்குள் உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொள்வோம்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்குப் பொருளாதாரத் தடைகள் விதிக்கும் அதிகாரம் இல்லை.- என்றார். (எ)

## காணி பறிபோகும் அச்சத்தில் துரிதமாக துப்புரவுப் பணிகள்

முல்லைத்தீவு, பெப். 28
முல்லைத்தீவு மாவட்டம் பனிச்சங்குளத்தில் அரச குடியிருப்பில் வசிக்காதவர்களின் நிலங்களை சுவீகரிக்க மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், உரிமையாளர்கள் அவசர அவசரமாக துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
அரச பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட காணியில் குடியிருக்காதவர்களின் காணிகள், காணியற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க முற்பட்டிருந்த நிலையிலேயே உரிமையாளர்கள் அவசர அவசரமாக துப்புரவு செய்யத் தொடங்கியுள்ளனர். முல்லைத்தீவில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு 2012ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிலத்தில் சிலர் வீடுகளை அமைத்த போதும் இதுவரையில் 4 குடும்பங்கள் மட்டுமே அங்கே வசிக்கின்றமையால் அந்தப் பகுதியில் பல சமூகவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.
இதனையடுத்து அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் காணியற்றவர்களுக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டது. இவ்வாறானதொரு நிலையிலேயே அந்தப் பகுதிகளை துப்புரவு செய்யும் பணியில் உரிமையாளர்களான அரச ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஒ.5.105)

## இரு நியமனங்கள்



யாழ்ப்பாணம்,பெப்.28
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன.
வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளராக ராஜேந்திரம் குருபரன் தனது நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இவர் முன்பு வடக்கு மாகாண விளையாட்டுத்துறை திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார். இதேவேளை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மீன்பிடித்துறை உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிய பாலன் முகுந்தன், விளையாட்டுத்துறை திணைக்களத்தின் பணிப்பாளராக தனது புதிய நியமனக் கடிதத்தை ஆளுநரின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டார். (ஐ)

## வீடு புகுந்து அட்டகாசம்



வவுனியா,பெப்.28
வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர்கள் பெண்களைத் தாக்கியமையுடன், அங்கிருந்த பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் செட்டிகுளம் சின்னத்தம்பனைக் கிராமத்தில் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்துள்ளது.
தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பப் பெண் அயலவர்களின் உதவியுடன் செட்டிகுளம் பிரதேச பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சம்ப்வம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-18)

## குற்றங்களை தடுக்க பொலிஸ் பாதுகாப்பு



யாழ்ப்பாணம்,பெப்.28
சங்கானையில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன் தெரிவித்தார்.
சங்கானை நகரில் குழு மோதல் ,வாள்வெட்டுச் சம்பவம், சந்தியில் ஒன்றுகூடுதல், கொள்ளை உள்ளிட்ட பல்வேறு அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன. மாலை 6 மணிக்குப் பின்னர் வர்த்தக நிலையங்கள் பூட்டப்படுகின்றன.
இதனால் வேலைக்குச் சென்று வீடு திரும்புவார்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொது நிகழ்வுகள் மற்றும் ஆலய திருவிழாக்கள், மாலை நேர வகுப்புக்களில் இருந்து வருபவர்கள் இவ்வாறான சம்பவங்களால் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளனர்.
இரவு 10 மணி வரை கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ய ஏதுவாக மாலை 4 மணியில் இருந்து இரவு 11 மணி வரை பொலிஸார் கடமையில் இருக்க வேண்டும் என்று சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரிடம் சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைவாக பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-7)

> 2009 ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியுடன் விடுதலைப்புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையில் தமிழ் மக்களை, அவர்களின் பூர்வீக இடங்களில் விமானக் குண்டு வீச்சுகளின் மூலம் அழித்தனர். இதற்கு நீதி கேட்டு தமிழ் மக்களும், தமிழ் பிரதிநிதிகளும் ஐ.நா. சபையிடமும், சர்வதேசத்திடமும் போராடி வருகின்றனர். காணாமற் போனவர்களின் உறவுகளும் பல தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

# ஒன்றுபட்டாலே எமக்கு நல்ல தீர்வு

● பீ.ஏ.அந்தோனிமார்க்

தமிழ் மக்கள் ஓர் அணியின் கீழ் ஒன்றுபட்டு வாக்களித்தல் காலத்தின் கட்டாயமாகும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக 1949 ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தமிழ் அரசுக்கட்சியை ஆரம்பித்தார். தமிழ் அரசுக் கட்சி பல ஒப்பந்தங்களை இலங்கை அரசுடனும், இந்திய அரசுடனும் செய்து வந்தது. இந்த ஒப்பந்தங்களை இலங்கை அரசு இனப்பாகுபாட்டை முன்வைத்து மதிப்பளிக்காது கிழித்தெறிந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால் 1988ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 13 ஆவது சரத்து மட்டும் இன்று வரை அரைகுறையாக நிலைத்து நிற்கிறது.


### தமிழர்களின் பலம்

இது ஒன்று தான் வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி ஆட்சிக்குரிய அடித்தளமாக அமைந்துள்ளது. 1989 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை இந்த இணைப்பு இயங்கி வந்தது. இவை இன்று இரண்டு மாகாண சபைகளாக இயங்கி வருகின்றன. இதனால் தமிழர் பலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வலிமையற்ற நிலையில் உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 30 ஆண்டுகளாக இந்த மாகாணங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்து வருகிறது. தமிழ் மக்களுக்கு சுய ஆட்சி (சமஷ்டி ஆட்சி) கொடுக்கக் கூடாது என்ற அடிப்படை இனவாத நோக்கத்தில் பெரும்பான்மை சிங்கள அரசு தரப்பினரும் பௌத்த பிக்குகளும் சிங்கள இராணுவத்தின் உதவியுடன் தமிழ் மக்களைப் பயமுறுத்தி ஆட்சி செய்து வருகின்றனர்.

### இழப்புக்கள் அதிகம்

2009 ஆம் ஆண்டு இந்தியா,பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையில் தமிழ் மக்களை, அவர்களின் பூர்வீக இடங்களில் விமான குண்டு வீச்சுகளின் மூலம் அழித்தனர். இதற்கு நீதி கேட்டு தமிழ் மக்களும், தமிழ் பிரதிநிதிகளும் ஐ.நா. சபையிடமும், சர்வதேசத்திடமும் போராடி வருகின்றனர். காணாமற் போனவர்களின் உறவுகளும் பல தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இன்று வரை தமிழ் மக்களோடு கூட இருப்பவை தமிழ் அரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் தான். தற்போது உருவாக்கப்பட்டுள்ள மாற்றுத் தலைமை, மாற்று கட்சிகளால் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் மிகவும் பாதகமான காலமாகும். ஏனெனில் தற்போது வந்துள்ள புதிய ஜனாதிபதியும், புதிய பிரதமரும், பௌத்த பிக்குகளும் தமிழ் மக்களுக்குரிய அரசியல் உரிமையையும், சமஷ்டி ஆட்சியையும், சுய நிர்ணய உரிமை




களைக் கொடுக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். இது சிங்கள பௌத்த நாடு என்று கூறிவருகிறார்கள். சர்வதேசமும் ராஜபக்ஷக்களின் வலைக்குள் அகப்பட்டுள்ளன. எனவே எமது போராட்டங்கள் சிறந்த முறையில் வழிநடத்தப்பட வேண்டும். எமது பலம் பிரிக்கப்படாமல் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

### ஒன்றுபடுவோம்

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பார்கள். மக்களால் தோல்வியடையச் செய்து நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகள், அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் மாற்றுக்கட்சிகளை உருவாக்கியமை மட்டும்மல்லாமல் தமிழ் அரசுக்கட்சியையும், தமிழ்க் கூட்டமைப்பு மீதும் வீண் பழி சுமத்தி மக்கள் மத்தியில் தமிழ்க் கூட்டமைப்பின் உள்ள நற்பெயரை மழுங்கடித்து வருகின்றனர். தாங்களே நாடாளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றவேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

வெற்றுக் கட்சிகளை இணைத்து வடக்கு, கிழக்கு மாகாணத்தின் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற பேராசையில் தமிழ் மக்களுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் தமிழரசுக் கட்சி எந்த காலத்திலும் பதவிகள் பட்டங்களுக்கு விலை போகாத கட்சி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம். தமிழ் மக்களின் பலமாகும்.

### விழிப்பாக இருப்போம்

வடக்கு, கிழக்கில் 20 இற்கு மேற்பட்ட கட்சிகள் போட்டியிடவுள்ளன. இவற்றில் பல கட்சிகளின் நோக்கம் வெற்றியல்ல. தமிழரின் வாக்குகளைப் பிரித்து, தமிழ் மக்களின் நாடாளுமன்ற ஆசனத்தைக் குறைத்தலே அவர்களது நோக்கம். எனவே தமிழ் மக்கள் விழிப்பாக இருந்து இந்தத் தேர்தலில் ஓர் அணியில் ஒன்று திரண்டு வெற்றி பெற்று எமது உரிமைகளைப் பெற்றெடுக்க வேண்டும். ஐ.நா. சபையையும், சர்வதேசத்தையும் எமது பக்கம் திருப்ப வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பல பொறுப்புக்களைச் சுமக்க வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைகளையும், பொறுப்புக்களையும் தக்கமுறையில் நிறைவேற்ற வேண்டியது காலத்தின் கடமையாகும். எமது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்தி பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை முன்னெடுக்க வேண்டும்.

### இழுத்தடிக்கப்பட்ட அரசியல் சாசனம்

கடந்த அரசின் காலத்தில் தமிழ் மக்களுக்குச் சார்பாக ஓர் அரசியல் சாசனத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் முரண்பட்ட கருத்துக்கள் உருவாகி தமிழ் மக்கள் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு சாதகமாக இந்த அரசியல் சாசனம் அமையலாம் என்ற கோட்பாட்டில் இந்த அரசியல் சாசனம் இழுத்தடிக்கப்பட்டுள்ளது. எது எப்படி இருந்தாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முயற்சியால் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு ஆர்.டி.பண்டாரநாயக்கா - செல்வா ஒப்பந்தம், அதன் பின்பு டட்லி செல்வா ஒப்பந்தம், சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி 13 ஆவது சரத்து இவைகள் தமிழ்த் தேசியக்" கூட்டமைப்பின் முயற்சியால் உருவாக்கப்பட்டன. எனவே தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் அரசு 2/3 வாக்குகளைப் பெற்று தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்க வலை விரிக்கப்பட்டுள்ளது. நிரந்தரமான தீர்வைப் பெற கூட்டமைப்பு பல தந்திரோபாயங்களையும், விட்டுக்கொடுப்புக்களையும் செய்து வந்தது. புதிய பிரதமரும் ஜனாதிபதியும் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளைக் கொடுக்க மாட்டோம் என ஆணித்தரமாகக் கூறியுள்ளமையால், தமிழ் மக்கள் இனியாவது தங்கள் பலத்தைக் காட்ட வேண்டும். அனைவரும் ஒன்று திரண்டு 21 ஆசனங்களையும் கைப்பற்ற வேண்டும். தற்போது அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் நமது பக்கமாக தமது பார்வையைத் திருப்பியுள்ளன இதற்கு எதிரான சக்திகளும், மாற்றுக் கட்சிகளும் அரசினால் இறக்கப்பட்டுள்ளன. வாக்குகளைப் பிரித்து தமிழர் பலத்தை அழிப்பதற்கு அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. எனவே அனைவரும் ஒன்று திரண்டு மாற்றுக் கட்சிகளுக்கு ஒரு வாக்கைத்தானும் இடாமல், தமிழ் மக்களின் விடுதலையைக் கருத்தில் கொண்டு தயாராவோம்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



## தேர்தலை இலக்கு வைத்து வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா,பெப்.28
சைவமும்,தமிழும் காக்கும் வேடபாளர்களுக்கு வாக்களியுங்கள் என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் வவுனியாவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் தேர்தலில் சைவ வாக்காளர்களைக் கவரும் நோக்கில் சிவசேனை அமைப்பை உரிமைகோரி இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் "தமிழ் தேசியம் காக்க சைவ வாக்காளர்கள் யாவரும் சங்கங்கள், உள்ளூராட்சி சபை, மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் சைவமும் தமிழும் காக்கும் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்" என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. (ஐ-110)

## தமிழரின் கோரிக்கைகளை கொச்சைப்படுத்துகின்றார்!

*பாதுகாப்புச் செயலரைச் சாடுகிறார் குகதாஸ்*

யாழ்ப்பாணம், பெப். 28
"புலிகளின் சித்தாந்தத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனரே தவிர, தமிழ் மக்களுக்கு அதில் எவ்வித விருப்பமும் இல்லை" என்று பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ண தெரிவித்துள்ள கருத்தைக் கண்டித்துள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ், "தமிழரின் அடிப்படைச் சித்தாந்தக் கோரிக்கைகளை அவர் கொச்சைப்படுத்துகின்றார்" என்று குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாம்பியா நாட்டு இராணுவத் தளபதி இலங்கை பாதுகாப்புச் செயலரை சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்திருந்தார். அதன்போது, குணரட்ண மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சித்தாத்தத்தையே முன்னெடுத்தார்களே தவிர, புலிகளின் சித்தாந்தம் என்று எதுவும் முன்வைக்கப்படவில்லை. சுய நிர்ணய உரிமைகள் தொடர்பாக பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். சூடான், பிரிட்டன் போன்ற நாடுகளில் வாக்கெடுப்பின் மூலமாக அவ்வாறு பிரிந்துள்ளன.

2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளைக் கொள்கையாகக் கொண்டு கூட்டமைப்பினர் பயணிக்கின்றனர். - என்றார். (த-20)

# சட்டவிரோத அகழ்வு பேராற்றில் தாராளம்!

*தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை*

**முல்லைத்தீவு, பெப். 28**

**முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கெருடமடு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் மணல் அகழ்வு அனுமதியின்றித் தாராளமாக இடம்பெறுகின்றது. இதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது.**





இந்த பகுதிகளினூடாக ஊடறுத்துப் பாய்கின்ற பேராற்றில் பெரியளவில் குழிகள் அகழப்பட்டு, இயற்கைச் சமநிலையைச் சீரழிக்கும் வகையில் மணல் அகழ்வு இடம்பெற்றுவருகின்றது.

இது தொடர்பில், புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக முறையிட்டுவந்த நிலையில், புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர்களான முத்துச்சாமி முகுந்தகஜன், சிறீக்குமரன் நிசாந்தி, நாகமணி வன்னியசிங்கம் ஆகியோர் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்குச் சென்று மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள, கெருடமடு பகுதியில் பேராற்றில் மிகப் பெரிய அளவில் மண் அகழப்பட்டு ஆற்றுக்குவெளியேகுவிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்துக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் சென்றதும் மணற் திருடர்கள் மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய கனரகவாகனங்களை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வசந்தபுரம் பகுதியில், தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது.

இந்த அனுமதியற்ற மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (த-19)

## தென்பகுதி கழிவு முகாமையை இங்குள்ளோர் பார்க்கவேண்டும்

*ஏற்பாடு செய்யுமாறு தவிசாளர் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்ப்பாண மாவட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் சிறந்த வெளிப்பாட்டைக் கொண்டுவரவேண்டுமாயின் உள்ளூராட்சி மன்ற அலுவலர்களை தென்பகுதிக்கு அழைத்துச் சென்று சிறப்பாக இடம்பெறும் கழிவு முகாமைத்துவ முறைகளைக் காண்பிக்கவேண்டும். அனுபவங்களைப் பெறவேண்டும். அதற்கு உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்துகின்றார், வலி. மேற்குபிரதேச சபை தவிசாளர் த. நடனேந்திரன்.


யாழ்ப்பாண மாவட்டம் 20 வருடங்களுக்கும் மேலாக பல்வேறு செயற்றிட்டங்களையும், முன்னாயத்த முயற்சிகளையும் மேற்கொண்டபோதும் இதுவரை சிறந்த வெளிப்பாட்டைக் கொண்டுவரவில்லை. உக்கும் கழிவுகள் உக்காத கழிவுகள் தொடர்பான அனுபவப் பகிர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மேற்குறித்த தென்பகுதிக்கான பயணம் அவசியம்.

அத்துடன், திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகளையும் வெளிநாட்டு அனுபவங்களையும் பார்வையிடு வதற்குச் சந்தர்ப்பம் வழங்கி உதவினால் எதிர்காலத்தில் நல்ல எதிர்பார்ப்பைக் காணலாம். - என்றார். (த-50)

## கடமைகளை பொறுப்பேற்பு

காரைநகர்,பெப்.28
காரைநகர் பிரதேச செயலராக மரியதாசன் ஜெகூ நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதுவரைகாலமும் காரைநகர் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி உஷா சுபலிங்கம் சாவகச்சேரி பிரதேச செயலராக நியமிக்கப்பட்டமையை அடுத்து அந்த இடத்துக்கு மரியதாசன் ஜெகூ நியமிக்கப்பட்டார். சாவகச்சேரிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி தேவநந்தினி பாபு வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றமையையடுத்தே, காரைநகர் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி உஷா சுபலிங்கம் சாவகச்சேரி பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ-250)



*கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் ஊக்கச் செயற்பாடாக "நாம் இலங்கையர்" எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் இனங்களைப் பிரதிபலிக்கும் வகையில் வேடம் இட்டு தமது தனித்துவங்களை வெளிப்படுத்தினர். (க)*

## கஞ்சிபான சிறைக்கூடத்தில் அலைபேசி, சிம் அட்டைகள்

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளான ஊரு ஜுவா, கஞ்சிபான இம்ரான் ஆகியோரின் சிறைக் கூடங்களிலிருந்து அலைபேசியொன்றும், சிம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும், அவை சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

27 புலனாய்வு அதிகாரிகளைக் கொண்ட குழுவால் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# பெரு வெற்றியே இலக்கு!

## பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, பெப்.28

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத மாபெரும் வெற்றிபெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி கூட்டணியின் பிரதான இலக்காகும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியின் செயலாளருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய கூட்டணி தொடர்பில் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களக் கட்சிகள் மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் எமது புதிய கூட்டணியில் இணைத்து வருகின்றோம். இதுவரை மொத்தமாக 14 கட்சிகள் இணைந்துள்ளன. மேலும் பல கட்சிகளை இணைக்கவுள்ளோம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் வலுமைமிக்க பலமிக்க கூட்டணியாக எமது கூட்டணி செயற்படும். 'தாமரை மொட்டு' சின்னத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்போம். சின்னம் தொடர்பில் இறுதி முடிவு எடுத்துவிட்டோம். எனவே, எக்காரணம் கொண்டும் சின்னத்தை மாற்றவே மாட்டோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை நிறுவ ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சிக்குக் கிடைத்த அமோக வெற்றியினால் ஸ்ரீலங்கா பொது ஜன சுதந்திர முன்னணியை சுலபமாக நிறுவியுள்ளோம்.

எமது கூட்டணி நாட்டு மக்களின் பேராதரவுடன் வரலாறு காணாத மாபெரும் வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலில் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது - என்றார். (எ-22)

# பாவிகளும் பரமனின் பிள்ளைகளும்

"நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்". (லூக்.5:32)

ஒரு கிராமத்தில் ஒரு குருவுக்கு ஆறு சீடர்கள் பணிபுரிந்து வந்தனர். நேர்மையும் கடமையும். வாய்மையும் பணிவும் நிறைந்த அந்தச் சீடர் குழாமில் ஒரு சீடர் தலைகீழாக தறிகெட்ட செயல்களைச் செய்து குருவின் பெயரைக் கெடுத்து வந்தார். அவரது நெறியற்றதனத்தை நல்ல சீடர்கள் பலமுறை குருவுக்கு முறையிட்டு அவரை நீக்கிவிடுமாறு கூறினர். ஆனால் குருவோ அவர் இருக்கட்டும் என்றார்.




அவரது திருகுதாளங்கள் உச்சகட்டம் அடையவே ஒருநாள் ஏனைய சீடர்கள் ஒன்றாக வந்து குருவிடம் முறையிட்ட போதும் அவர் இங்கேயே இருக்கட்டும் என்றார். அப்போது அவர்கள் அப்படியென்றால் நாம் அனைவரும் சென்றுவிடுகிறோம் என்றனர். குரு அப்படியே செய்யுங்கள். அவர் இங்கேயே இருக்கட்டும் ஏனெனில் அவருக்குத்தான் என் உபதேசம் தொடர்ந்து தேவை என்றார்.

தவறுகள் தீமைகள், வன்முறைகள், பாவங்கள் மலிந்துள்ள இன்றைய சமுதாயத்திலே அவற்றைப் புரிபவர்கள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் உளவளத்துணைகளையும் வழங்கி சமூக கட்டமைப்புக்குள் உள்வாங்க சமய, சமூக தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் முன்வரவேண்டும். கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்தில் தன்னிலை உணர்ந்து மனமாற வழிசமைப்போம். பாவிகளை மனம் மாற அழைக்க வந்த இயேசுவின் பணியைத் தொடர்வோம்.

**எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.**

# யாழ்.கம்பன் விழா இன்று கோலாகலமாக ஆரம்பம்

## தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,பெப்.28

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் யாழ்ப்பாணக் கம்பன் விழா இன்று 28 ஆம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விழாக்களின் வரிசையில் 2020 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழா மூன்று நாள்களும் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் தமிழக அறிஞர்களும், நம்நாட்டு அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வழமைபோல எழிலுரை, இலக்கிய ஆணைக்குழு, சுழலும் சொற்போர், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்வுகள் இம்முறையும் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு மங்கல இசை முழங்க ஆரம்பமாகும். இன்றைய சிறப்பு நிகழ்வுகளாக எழிலுரை, இலக்கியஆணைக்குழுநடைபெறும்.

**எழிலுரை:** "கம்பன் என்றொரு மானுடன்" பாரதி கிருஷ்ணகுமார் (திரைப்பட இயக்குநர் தமிழ்நாடு)

**இலக்கிய ஆணைக்குழு:** ஆணையாளர்: பேராசிரியர் மு.இராமச்சந்திரன் (தமிழ்நாடு) பொருள் "வேட்



பமொழியும் வீறுடைத் தொடர் எனுந் தகுதி எத்தொடர்க்கு உரியது?"

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு **சுழலும் சொற்போர்** - நடுவர்: பாரதி கிருஷ்ணகுமார்- பொருள்: எளிமையின் வடிவாய் நின்று பெரிதும் ஏற்றமுறுபவன்..."

**சனிக்கிழமை மாலை - பட்டி மண்டபம் நடுவர்:** 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ் பொருள்: 'கற்போர் மனதைப் பெரிதும் திகைப்புறச் செய்யும் காவியத்திருப்பம்..."

நாளை மறுதினம் ஞாயிறு காலை 9.30 மணிக்கு **சிந்தனை அரங்கு** - நடுவர் 'கம்பவாரிதி இ.ஜெயராஜ் - பொருள் : "வள்ளுவ இலக்கணமும் கம்ப இலக்கியமும்"-

**ஞாயிறு மாலை 4.30 மணிக்கு - வழக்காடு மன்றம்** - நீதியரசர்கள் இ.ஜெயராஜ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி ஆறு.திருமுருகன்.

**வழக்கு :** துறவின் வரம்பு கடந்து இயங்கிய விஸ்வாமித்திரர் குற்றவாளி.

## கணேச முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.28

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, கணேச சனசமூக நிலையத் தலைவர் சி. செல்வஸ்கந்தராஜா தலைமையில் ஆயாக்கடவை சித்தி விநாயகர் கோவில் முன்பாக எதிர்வரும் மார்ச் மாதம் 07 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் ஆ.திருநாவுக்கரசு முதன்மை விருந்தினராகவும், உடுவில் கோட்டம் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. வடிவாம்பிகை ஜெகராசா சிறப்பு விருந்தினராகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ஜஸ்மின் அன்ரன் ஞானகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர் .

(அ. ரி1)

## தவக்கால திருயாத்திரை நிகழ்வுகள்

சாட்டி சிந்தாத்திரை மாதா திருத்தலத்துக்கான தவக்கால திருயாத்திரை நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை முதல் மார்ச் 28 ஆம் திகதி வரையான பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளன என சாட்டிப் பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

தவக்காலத்தில் வரும் சனிக்கிழமைகளில் காலை 9 மணிக்கு சிலுவைப் பாதை, முற்பகல் 11 மணிக்கு ஒப்புரவு அருட்சாதனம், நண்பகல் 12 மணிக்கு திருப்பலி, பிற்பகல் 3 மணிக்கு திருச்செபமாலை, 3.30 மணிக்கு நற்கருணை ஆராதனை, 4.30 மணிக்கு இறுதிஆசீரும் இடம்பெறும்.

தியான வழிபாடுகள் யாழ்ப்பாணமறைமாவட்டத்தில்உள்ள மறைக்கோட்டங்களுக்கு பகிர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளது. நாளை சனிக்கிழமை தீவக மறைக்கோட்டமும், மார்ச் 7ஆம் திகதி இளவாலை மறைக்கோட்டமும், மார்ச் 14ஆம் திகதி பருத்தித்துறை மறைக்கோட்டமும், மார்ச் 21ஆம் திகதி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மறைக்கோட்டங்களும், மார்ச் 28ஆம் திகதி யாழ்ப்பாண மறைக்கோட்டமும் தவக்கால திருயாத்திரையில் பங்குபற்றவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-135)

# முன்னாள் மேயருக்கு சபையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயர் ராஜா விஸ்வநாதனுக்கு, யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

1979ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை மாநகர சபையின் மேயராக அவர் பதவி வகித்திருந்தார். கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் பணிகளில் ஈடுபட்ட பலரில் இவரும் ஒருவர். இவ்வாறெல்லாம் விளங்கிய விஸ்வநாதன் கடந்த 10ஆம் திகதி ஆஸ்திரேலிய மண்ணில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டபோது, விஸ்வநாதனுடன் பணியாற்றியவரும் தற்போதைய மாநகர சபை உறுப்பினருமான சொலமன் சூ சிறில் நினைவுரையாற்றினார். (ஒ.5,105)

## பயிற்சியில் ஈடுபட்ட மாணவிக்கு பாதிப்பு

சாவகச்சேரி, பெப். 28

உயரம் பாய்தல் பயிற்சியில் ஈடுபட்ட 12 வயது மாணவி மெத்தைக்கு கீழ் வீழ்ந்ததில் இடுப்புப் பகுதியில் அடிபட்டு பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் நேற்று சம்பவம் இடம்பெற்றது.

பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் உயரம்பாய்தலில் முதலிடம் பெற்ற இந்த மாணவி வலயப் போட்டியில் பங்குபற்றும் நோக்கில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதே நிலத்தில் வீழ்ந்து பாதிப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## குடைச் சுவாமியாரின் வருடாந்த குருபூசை

குடைச் சுவாமியாரின் வருடாந்த குருபூசை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை , நடைபெறவுள்ளது.

குடைச்சுவாமியாரின் சமாதி அமைந்துள்ள கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் மதியம் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் குருபூசை நிகழ்வில், விசேட அன்னதானமும் வழங்கப்படும் என ஆலயப் பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ. ரி1)

# ஒரு லட்சம் வேலை வாய்ப்பு: வீடு தேடி வருகிறது ராணுவம்



**யாழ்ப்பாணம், பெப். 28**

**ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு நேர்முகத் தேர்வில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கும், அது தொடர்பில் விசாரணை செய்வதற்கும், இராணுவத்தினர் வீடுகளுக்குச் செல்லவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.**

நாடு முழுவதும் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் பிரதேச செயலகங்களில் இடம்பெற்று வருகின்றன. நேர்முகத் தேர்வுக்கான குழுவில் இராணுவத்தினர், விமானப் படையினர் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மற்றும் அவர்கள் தெரிவிக்கும் விவரங்கள் என்பனவும் இராணுவத்தினரால் தனியாகக் கோவைப்படுத்தப்படுகின்றன. அவர்கள் வழங்கிய விவரங்களின் அடிப்படையில் இராணுவத்தினர் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன் புலனாய்வுத் தகவல்களையும் திரட்டவுள்ளனர்.

'நேர்முகத் தேர்வுக்குத் தோற்றும் பலரும் வறுமை என்று கூறியுள்ளனர். இதன் உண்மைத்தன்மையை ஆராய்வதற்காகவே இராணுவத்தினர் வீடுகளுக்குச் செல்லவுள்ளனர்' என்று மாவட்டச் செயலர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-5-105)

## இலங்கையர் தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, பெப்.28

கொரியாவில் உள்ள இலங்கையர் தொடர்பாக 24 மணித்தியால தொலைபேசிச் சேவையை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் முன்னெடுத்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் தொற்று தற்போது தென்கொரியாவில் அதிகரித்துள்ளது. தென்கொரியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது. அங்குள்ள இலங்கையர் எவரும் இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையர் எவருக்கும் பிரச்சினை ஏற்பட்டால் 24 மணித்தியாலம் செயற்படும் மூன்று தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 0082-27352966, 0082-27352967,0082-27942668 ஆகிய இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

அளவெட்டி,பெப்.28

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் பொதுக்கூட்டமும், நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்தில் வலி.வடக்குப் பிரதேச செயலாளர் ச.சிவசிறி, பிரதேச செயலக உதவிச் செயலாளர் திருமதி.கோ.சங்கீதா, கணக்காளர் ப.கஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. எஸ்.சிவகரன் மற்றும் யாழ். மாவட்ட அரச சேவை ஓய்வூதியச் சங்கத் தலைவர் என்.சிவரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சங்கத்தில் உறுப்புரிமை பெறாத ஓய்வூதியர்கள் அன்றையதினம் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து, உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (சு-36)

## 'வைபரின்' மூலமாக அதிஷ்டலாப சீட்டு!

### புதிய முயற்சியில் தேசிய லொத்தர் சபை

கொழும்பு, பெப்.28

தேசிய லொத்தர் சபை "வைபர்" தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதிஷ்ட இலாப சீட்டு விற்பனையை ஆரம்பித்துள்ளது.

புதிய சந்தை வாய்ப்பை கண்டறியும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வைபர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிஷ்ட இலாப சீட்டு விற்பனை செய்வதன் மூலம் அதிஷ்ட இலாப சீட்டு கருமபீடத்துக்கு சென்று அதனைக் கொள்வனவு செய்வதற்கு முடியாத உயர் தர தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பல்வேறு பிரிவினருக்கும் எந்தவித சிரமமும் இன்றி அதிஷ்ட லாப சீட்டை கொள்வனவு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வைபர் ஊடாக சீட்டிழுப்புக் காணொலி காட்சிப்படுத்தப்படவுள்ளது. இதேபோன்று உத்தியோக பூர்வ பெறுபேறு புதிதாக அறிமுகப்படுத்தப்படும் பரப்புரை வேலைத்திட்டம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்படும். தேசிய லொத்தர் சபையின் வருடாந்த வருமானம் 2 ஆயிரம் கோடி ரூபாவாகும் என்றும் தேசிய லொத்தர் சபை தெரிவித்துள்ளது.(எ)

## சேறு பூசும் நோக்குடனேயே சவேந்திர மீது குற்றச்சாட்டு!

### மஹிந்த யாப்பா கண்டுபிடிப்பு



கொழும்பு, பெப்.28

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மீதான குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சேறு பூசுவதற்காகவே சுமத்தப்பட்டவை என்று இராஜாங்க அமைச்சர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக முறையான விசாரணைகளை மேற்கொள்ளவோ, அவர் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? என விசாரணைகளின் ஊடாக கண்டறிவதற்காக அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை. குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அவருக்கு சேறு பூசும் வகையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார். (எ)

## இரு நூல்கள் வெளியீடு


யாழ்ப்பாணம்,பெப்.28

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் 'காலத்தின் தடங்கள்','மறைபொருள் நாடகங்கள்' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286,பிரதான வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார்.


நூலுக்கான வெளியீட்டு உரையை திருமறைக்கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளர் சி.செல்மர் எமிலும், 'காலத்தின் தடங்கள் நூலுக்கான மதிப்புரையை மூத்த பத்திரிகையாளர் ச.ராதேயனும், 'மறைபொருள் நாடகங்கள்' நூலுக்கான மதிப்புரையை செ.அன்புராசா அடிகளாரும் நிகழ்த்துவர். (சு-23)





யாழ்ப்பாணம் கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வின் இடைவேளையில், மாணவர்களின் இசையும் அசைவும் சிறப்பாக நடைபெற்றது. (த)

# தீர்வின்றேல் தீக்குளிப்போம்!



## வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப் 28

**“நியமனம் வழங்குமாறு கோரி ஆளுநர் அலுவலகம், சுகாதார அமைச்சு என்பனவற்றுக்கு அலைந்து திரிகின்றோம். எந்தப் பதிலும் கிடைக்கவில்லை, தீர்வும் கிடைக்கவில்லை. இரண்டு நாள்களுக்குள் உரியவர்கள் பதில் தராவிட்டால் தீக்குளிப்போம்” என்று வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.**

இதுவரை அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை. இந்த நிலையில், தமக்கு நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் பண்ணை யில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:



சுகாதாரத் தொண்டர்களாக பல வருடங்கள் சேவையாற்றி வருகின்றோம். நிரந்தர நியனமனம் வழங்குவதற்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. சுமார் ஆயிரத்து 920 பேருக்கு இரண்டு நாள்களில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. பின்னர் கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்குமாறு தபால் மூலமாக அழைப்பு வந்தது. 25 ஆம் திகதி நாம் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குக் கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்றோம். ஆனால் நியமனங்களை நிறுத்துமாறு கடிதம் வந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவிக்கப்பட்டு சுமார் மூன்று மாதங்கள் ஆகின்றன. ஆனால் எமக்குத் தீர்வு கிடைக்கவில்லை. இந்த நியமனத்தில் ஊழல் நடைபெற்றுள்ளது. நியமனம் வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். ஆயிரத்து 920 பேருக்கு இரண்டு நாள்களில் நேர்முகத் தேர்வு நடத்தி முடித்த சுகாதார துறையினர், ஊழல் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு 3 மாதங்கள் எடுக்கின்றனர். நாம் மன நோயாளிகள் ஆகி விட்டோம். ஆளுநர் அலுவலகம், சுகாதார அமைச்சு என அலைந்து திரிகின்றோம். எமக்கு எந்தப் பதிலும் இல்லை. எமக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்றால் நாம் தீக்குளிக்க வேண்டிவரும். - என்றனர். (து-7)



## உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு வேண்டும்

*கூட்டுறவு ஆணையாளர் கோரிக்கை*

யாழ்ப்பாணம்,பெப்.28

ஜசுபி பழரசத் தொழிற்சாலை உட்பட வடக்கின் உற்பத்திப் பொருள்களைக் கூட்டுறவு அமைப்புக்கள் கொள்வனவு செய்து, அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும். உற்பத்திப் பொருள்கள் யாவும் மக்களைச் சென்றடைய கூட்டுறவுச் சங்கங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஜசுபி பழரசத் தொழிற்சாலையின் உற்பத்தி பொருள்களுக்கான விற்பனை நிலையம், தொழிற்சாலைக் கட்டடத்தில் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது.

சங்கத்தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைத்த பின்னர், அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் கூட்டுறவு அமைப்புக்களால் உற்பத்தி செய்யப்படும் சகல உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கும், உரிய சந்தை வாய்ப்பைக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஏற்படுத்திக் கொடுக்கும்.

அதற்கமைவாக கூட்டுறவு சங்கங்களின் கோப்சிற்றிகள் மற்றும் கூட்டுறவு மக்கள் கடைகளில் உள்ளூர் உற்பத்தி பொருள்களின் விற்பனைக்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனைகளும் அங்கே அதிகமாக இடம் பெற்று வருகின்றன. இந்த விற்பனை நடவடிக்கை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். வடக்கில் உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான நடமாடும் சேவைகளும் இந்த ஆண்டில் அதிகரிக்கப்படும். குறிப்பாக ஜசுபி பழரசத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக திணைக்களம் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கும். - என்றார். (க-17)

## கோத்தாபயவின் ஆட்சியில் சமூக எழுச்சி உருவாகுமாம்

*மகாசங்கத்தினர் ஆருடம்*

கொழும்பு, பெப்.28

நாட்டின் மீதும் சமயத்தின் மீதும் பற்றுள்ள தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நிச்சயமாக நாட்டில் சமய, சமூக, எழுச்சி உருவாகும் என்று மகாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையின் தேசிய மாநாடு நடைபெற்றது. அதில் உரையாற்றிய அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், அறநெறி கல்வியின் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார். ஒழுக்கநெறி கொண்ட நாடு மற்றும் எதிர்கால சந்ததியினரை கட்டியெழுப்புவதைத் தனது நோக்கமாகக் கொண்ட தற்போதைய ஜனாதிபதி, அதற்காக தனது பங்களிப்பை வழங்குவார் என நம்பிக்கை வெளியிட்டார்.

அறநெறிப் பாடசாலை மற்றும் விகாரைகளின் அபிவிருத்திக்காக செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களை பாராட்டும் வகையில் இந்தமுறை இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. -என்றுள்ளது. (எ)

## 28 ஆயிரம் குடும்பங்களுக்கு ‘கொங்கிறீற்’ நிரந்தர வீடுகள்

சாவகச்சேரி,பெப்.28

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் போர்க் காலத்தில் பாதிக்கப்பட்ட 28 ஆயிரம் குடும்பங்களுக்கு புதிய தொழில் நுட்பத்தில் கொங்கிறீற் நிரந்தர வீடுகள் அமைத்து வழங்கப்படவுள்ளன.

சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

போர் காரணமாக இடம் பெயர்ந்து திரும்பவும் தமது இடத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில், வீடமைப்புத்திட்டம் தேவைப்படும் நலிவுற்ற குடும்பங்களில் முதற்கட்டமாக போர் பாதிப்பை முன்னுரிமை அடிப்படையில் 25 பயனாளிகளின் பெயர் விவரங்களைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ-9)

*மஹர சிறைச்சாலையிலுள்ள*

## பள்ளிவாசலில் புத்தர் கண்டிக்கிறார் ரிஷாத்

மன்னார், பெப். 28

மஹர சிறைச்சாலையில் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த பள்ளிவாசலுக்குள் புத்தர் சிலையை நிறுவி, அதனை ஓய்வு அறையாக மாற்றி, முஸ்லிம் சமூகத்தின் மத உணர்வுகளைக் காயப்படுத்திய இழிசெயலை வன்மையாகக் கண்டிக்கின்றார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன்.

அவர் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்தத் தீய செயலுக்குப் பின்னால் உள்ள சக்திகளுக்கு எதிராக, கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கேட்டுள்ளேன்.

இந்தச் செயல் அரசமைப்பில் மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் நிராகரிக்கின்ற செயல்.


**ஜனநாயக நாட்டில் இறைமை மற்றும் உரிமைகளை மீறுகின்ற இந்தச் செயல் கேலிக்குரியது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் தடுப்பது. அரசின் முக்கிய பொறுப்பு. - என்றுள்ளது. (த-56)**


## தென்மராட்சியில் நெல் பரிசோதனை

சாவகச்சேரி,பெப்.28

நெல்சந்தைப்படுத்தும் சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையில் அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளனர். அதற்கமைவாக கைதடி கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட மூன்று நிலையங்களில் இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பரிசோதனைகள் நடைபெறும்.

இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கைதடி நுணாவில் குமர குருபரன் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மறவன்புலவு பொது நோக்கு மண்டபத்திலும், நெல் பரிசோதனை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)







# இயந்திரமயமானது விவசாயம்; வருமானமின்றி பலரும் அவலம்

## மன்னார் விவசாயத் தொழிலாளர்கள் கவலை

**மன்னார்,பெப். 28**

**இயந்திரமயமாக்கலுக்குள் விவசாயம் கொண்டு செல்லப்பட்டதால், அந்தத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த பலரும் பெரும் பாதிப்புக்குள்ளாகி, போதிய வருமானம் இல்லாமல் தவிக்கின்றனர். அவ்வாறான மக்களின் வாழ்வாதாரத்தை முழுமைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில், கடற்றொழில் மற்றும்விவசாயம்போன்றனபிரதானமான வாழ்வாதாரத் தொழிலாகக் காணப்பட்டாலும், நானாட்டான், மாந்தை, மடு, முசலி போன்ற பிரதேச வாழ் மக்கள் விவசாயத்தை மாத்திரமே வாழ்வாதாரத் தொழிலாக செய்கின்றனர். விவசாயம் செய்வதற்கு நிலங்கள் இல்லாதவர்கள் விவசாயத்தோடு இணைந்த கூலித்தொழிலாளர்களாக உள்ளனர். இவர்கள் உழவு, வரப்பு வெட்டுதல்,நெல் விதைத்தல், உரம் போடுதல், கிருமி நாசினி தெளித்தல், நெல் வயல்களை கண்காணித்தல், அரிவுவெட்டுதல், சூடுமிதித்தல், நெல்மூடை சுமத்தல் போன்ற பல வேலைகளைச் செய்து நிறைவான வருமானங்களை ஈட்டி வந்தனர். ஆனால் இன்று விவசாயத்தின் மூலம் சொல்லிக் கொள்ளும்படியான வேலை வாய்ப்புக்களும் வருமானங்களும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் மனித உழைப்பை கொண்டு செய்யப்பட்டு வந்த விவசாயம் இன்று இயந்திரமயமாகிவிட்டது. உழவு செய்தல் முதல் கொண்டு நாற்று நடுகை, மருந்து தெளித்தல், நெல் அறுவடை செய்தல் வரை விவசாயம் சார்ந்த அனைத்து வேலைகளையும், இயந்திரங்களே செய்து வருகின்றன.

நெல் அறுவடை காலங்களில் கைகளால் அறுவடை செய்யப்பட்டு அந்த கதிர் முடிச்சுகளை சுமந்து சென்று கதிர் குவியல் போடும் வரை பெண்களுக்கும் வேலை இருந்தது. ஆனால் இன்று அப்படி அல்ல பல மனிதர்கள் சேர்ந்து செய்த வேலைகளை இன்று அறுவடை இயந்திரம் மட்டுமே செய்து முடிக்கின்றது நெல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் வயலுக்கே சென்று நெல்லைக் கொள்வனவு செய்கிறார்கள். இதனால், விவசாயத்தை நம்பி வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள் தொழிலும் போதிய வருமானம் இன்றி தவிக்கின்றனர் என்றனர்.

இதற்கான தீர்வுகள் எட்டப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரங்களைப் போக்க வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவது கட்டாயமானதாகும் என்று கல்வியாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர். (ஐ-213)

# வெலிகமவில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் காயம்

கொழும்பு, பெப்.28

வெலிகம மிரிஸ்ஸ பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற துப்பா க்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளாார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்ற நிலையில், சம்பவத்தில் காயமடைந்தவர் மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் வீட்டில் இருந்த போது துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் குறித்து இதுவரையில் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மங்கள சமரவீரவை உடன் கைது செய்க

## விமலின் கட்சி கூக்குரல்

கொழும்பு, பெப்.28



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை, அரச துரோகக் குற்றச்சாட்டின் கீழ் உடன் கைதுசெய்ய வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸம்மில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 மற்றும் 40/01 ஆகிய தீர்மானங்களுக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியது சட்டவிரோதம். அப்படியான நடவடிக்கையை எடுக்க அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுக்கு எந்த வகையிலும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதனால் அரச துரோகக் குற்றச்சாட்டின் அடிப்படையில் மங்கள சமரவீரவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் - என்றார். (எ-22)

# கடந்த அரசின் செயலால் நட்டத்தில் மின்சார சபை

## மஹிந்தானந்த குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.28



இலங்கை மின்சார சபை பெரும் நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. எமது அரசின் காலத்தில் இலாப மீட்டும் நிறுவனமாக மின்சார சபை காணப்பட்ட போதும் கடந்த அரசின் காலத்தில் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் ஒரு மெகாவோல்ட் மின்சாரத்தை இணைக்கக் கூட நடவடிக்கை எடுக்காமையால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மின்சக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் 100 நாள் ஆட்சியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதிகளில் பல விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபை பெரும் நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. நுரைச்சோலை, கரவலப்பிட்டிய உட்பட எந்த அனல் மின் நிலையங்களும் கடந்த காலத்தில் கட்டியெழுப்பப்படவில்லை. கடந்த அரசின் காலத்தில் முறையாக முகாமைத்துவம் செய்யப்படவில்லை. அதனால் இலாபமீட்டிய மின்சார சபை தற்போதும் நட்டம் ஏற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ரவி கருணாநாயக்க இந்த அமைச்சை வகித்த காலத்தில் செய்துகொள்ளப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளும் இரத்துச் செய்யப்படும் - என்றார். (எ-24)

# வெளிச்சவீடு நாளை திறப்பு

மாதகல்,பெப்.28

இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தால், சேந்தாங்குளம் கடற்கரையில், நிர்மாணிக்கப்பட்ட வெளிச்சவீடு நாளை சனிக்கிழமை மீனவர் பாவனைக்குத் திறக்கப்படும்.

சேந்தாங்குளம் கடற்கரையில்அன்றையதினம்மாலை 5 மணிக்கு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிச்சவீடு திறக்க ப்பட்டதை அடுத்து, இசை நிகழ்வுகள் நடைபெறும். நிகழ்வில் யாழ் மாவட்ட, மேலதிக செயலர் (காணி) எஸ்.முரளிதரன், ஏ.வி.ஆர் அறக்கட்டளையின் தலைவர் பொ.சிவகுமார், சிவன் அறக்கட்டளையின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாதகல், குசுமான்துறை, சேந்தாங்குளம்மீனவர்களின் நன்மை கருதி இந்த வெளிச்சவீடு அமைக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# விமானப் பயிற்சி நிறுவனம் ஆரம்பிக்க நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.28

மத்தள மற்றும் இரத்மலான சர்வதேசவிமானம் நிலையங்களுக்கு அருகில் விமானிகளுக்கான இரு பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகம் முழுவதும் விமான சேவைகளுடன் தொடர்புபட்ட கல்விக்கான அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்றன. அதைக் கருத்தில் கொண்டு அதற்கான ஆலோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு பயிற்சி நிறுவனங்களையும் அமைப்பதற்கான வசதியை இரத்மலான விமானம் நிலையம் கொண்டுள்ளது. அங்கு பெரும் விமானங்களைத் தரையிறக்குவதற்கான வசதியும் உண்டு. தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான காணி மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையம் கொண்டுள்ளது.

உத்தேச புதிய பயிற்சி நிறுவனங்கள் இரண்டுக்கும் டுபாய், தாய்லாந்து, மியன்மார் போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களைக் கவரக் கூடிய வாய்ப்பு உள்ளது. சர்வதேச தரத்துக்கு அமைவாக இலங்கை விமான சேவை தொழில்துறை மற்றும் சந்தையில் அனுபவத்தைப் பரிமாறிக் கொள்வதற்கும் இது பின்புலமாக அமையும்- என்றார். (எ)

## பொதுநோக்கு மண்டபம் திறப்பு

சண்டிலிப்பாய்,பெப்.28

யாழ்ப்பாணம் மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்க பொதுநோக்கு மண்டபத் திறப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெறும்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.யோகராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,சிறப்புவிருந்தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப் உட்பட பலர் கலந்து கொள்வர். (ஐ-63)

## நிறுவுநர் தின நிகழ்வு

காரைநகர்,பெப்.28

காரைநகர் கிழவன்காடு கலா மன்ற நிறுவுநர் தின நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

கிழவன்காடு கலா மன்ற நிறுவுநரும் தலைவருமான ந. சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத் துறைப் பேராசிரியர் எஸ். ஸ்ரீசற்குணராசா, யாழ் இந்தியத் துணைத்தூதரக உயர் அதிகாரி எம்.கிருஷ்ணமூர்த்தி ஜயர், வேலணைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், கலைமாடக்கோன் ச.சிவஞானம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிறுவுநர் தின உரை, நாட்டிய நிகழ்வு, தமிழருவி த.சிவகுமாரன் தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றம், சான்றோருக்கான உயர் விருது வழங்கல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கிழவன்காடு கலாமன்றம் வழங்கும் ‘சிதம்பரஜோதி’ உயர் விருதை காரைநகர் ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வீ.ஈஸ்வரக் குருக்கள், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன், நாதஸ்வரக் கலைஞர் வி.கே.பஞ்சமூர்த்தி, சங்கீதபூசணம் சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

கிழவன்காடு கலாமன்றத்தில் பயின்று சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் வி.விதுஷன் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார். (ஐ-250)




யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பட்டில், பிரதேச சபைக்கு உட்பட்ட அறநெறிப் பாடசாலைகள் இணைந்து கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி விழாவை நடத்தின. (க-20)

# பெரமுனவின் ஆட்சியில் பெண்களுக்குத் துன்பம்

## ஹிருணிகா கொதிப்பு



**கொழும்பு, பெப்.28**

**பொதுமக்கள் பெரமுனவின் ஆட்சிக் காலத்திலேயே பெண்கள் தொடர்பான வன்முறைகள் அதிகரித்தன. இந்த வருடத்தின் 15 நாள்களுக்குள் மாத்திரம் 142 பெண்கள் துஷ்பிரயோகங்கள், 54 சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான சட்டத்தையும், தண்டனையையும் பலப்படுத்தாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த மாதம் சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும் காணொலி ஒன்று சமூக வலைத் தளங்களில் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் பலர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். நாம் முறைப்பாடு அளிக்கச் சென்றபோது ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவித்த பொலிஸார் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று தெரிவித்தனர். ஆனால் இதுவரையில் அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படும் சிறுவர்கள் அவர்களைத் துஷ்பிரயோகம் செய்வதை அறிந்து கொள்ள முடியாதவாறு இருக்கின்றனர். அவர்களுக்கு விளக்கத்தை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களுக்கு ஒரு பாட அலகையாவது நாம் உள்ளடக்க வேண்டும். - என்றார். (எ

# வவு.வர்த்தகர் சங்கத்துக்கு நகரில் ஒரு பரப்புப் காணி!

## *மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்*

வவுனியா, பெப்.28



வவுனியா வர்த்தக சங்கத்துக்கு நகரத்துக்குள் ஒரு பரப்புக் காணி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இது தொடர்பான தீர்மானம் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கம், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் என்பன தங்களின் செயற்பாடுகளைச் சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு வவுனியா நகரப் பகுதியில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு தலா ஒரு பரப்புக் காணி வழங்க வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் இந்தச் சங்கங்களுக்குக் காணி வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தர்மபால செனவிரத்ன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துல ஆகியோர் இந்தக் கோரிக்கையை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இந்தச் சங்கங்களுக்குக் காணி வழங்குமாறு வவுனியா பிரதேச செயலருக்குப் பரிந்துரை செய்தனர். (ஐ-18)

## மன்னாரில் தனிநபரின் போராட்டம் முடிந்தது

மன்னார், பெப். 28

மன்னார் நகர சபை மண்டபத்துக்கு முன்பாக 5 நாள்களாக தனியொருவர் மேற்கொண்ட உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்யுமாறு கோரியும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் மன்னாரைச் சேர்ந்த இரத்தினம் ஞானசேகரம் யூலியஸ் (வயது39) இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்தநிலையில், அவருடைய உடல் நிலையைக் கருத்திற்கொண்டு மன்னார் பிரஜைகள் குழுவினர் அவருடன் பேசி போராட்டத்தைக் கைவிட்டு வேறு வடிவத்தில் நோக்கத்தை முன்னெடுக்க ஆலோசனை வழங்கினர். அத்துடன் போராட்டம் முடிவுற்றது. (த-56)



# எத்தகைய பெயர் மாற்றங்களை செய்தாலும் 50 உறுப்பினர்களைக்கூட பெறாது ஐ.தே.கட்சி

கொழும்பு, பெப். 28
ஐக்கிய தேசியக் கட்சியானது எத்தகைய பெயர் மாற்றங்களை செய்தும் புதிய சின்னங்கள் மூலம் தேர்தலை சந்தித்தாலும் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூட பெறாது என இராஜாங்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.
ஐ.தே.க மூழ்கப்போகும் கப்பலாகும். அதில் ஏறி பயணிக்க எவரும் தயாராக இல்லையெனவும் அவர் கூறினார்.
ஆளுங்கட்சியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சு.கவினரை தம்முடன் இணையுமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஒரு கப்பல் மூழ்கப்போகுதெனத் தெரிந்தால் அதிலிருக்கும் எலிகளும் வெளியில் பாய்ந்துவிடும். சஜித் கப்பல் மூழ்கிவிட்டது. இறுதி நுணிமாத்திரமே தெரிகிறது. அதில் ஏறி பயணிக்க எவரும் தயாராக இல்லை.
முதல் ஐ.தே.கவில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வுகாணுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். அதன் பின்னர் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுங்கள். நாட்டை நாசமாக்கிய யானை - புலிகள் மீண்டும் இணையப் போகின்றனர். நாட்டை நாசமாக்கிய மற்றும் நாட்டை பிரிவினைவாதிகளுக்கு காட்டிக்கொடுத் தவர்களே இவ்வாறு இணையப்போவதுடன், ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்க வுள்ளனர்.
ஐ.தே.கவுக்குள் சின்னம் தொடர்பில் பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. உறுதியற்ற அல்லது ஒரு நிலையற்ற அரசியல் கட்சியானது தேர்தலில் எத்தகைய பெறுபேறுகளை பெறுமென்பது தெளிவானது. ஆகவே, எந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் 50 ஆசனங்களுகளையும் விட குறைவான நாடாளுமன்ற உறுப்பினர்களையே ஐ.தே.க பெறும்- என்றார். (ம)

## வேலைவாய்ப்புக்கு விடுகைப் பத்திரம்

### அரங்கேறிய சுவாரஸ்யங்கள்

யாழ்ப்பாணம், பெப். 28
ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்துக்கான நேர்முகத் தேர்வு பிரதேச செயலகங்களில் நடைபெற்று வருகின்றது. பாடசாலை விடுகைப் பத்திரம் நேர்முகத் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் பலரும் பாடசாலைகளில் இப்போதுதான் விடுகைப் பத்திரங்களைப் பெற்று வருகின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில், பாடசாலை விடுகைப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்குச் சென்றவர்களை, பழைய மாணவர் சங்கத்துக்கு 500 ரூபா செலுத்துமாறு பணித்துள்ளனர். பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே அவர்களுக்கு விடுகைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின் புறநகர்ப் பகுதியிலுள்ள பாடசாலையில் விடுகைப் பத்திரம் பெற்றுக் கொள்ளச் சென்றவர்களுக்கு, 2010ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆவணங்கள் அழிந்து விட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போது பாடசாலை அதிபராக இருந்தவரிடம் சென்று கடிதம் வாங்கி வருமாறு பணிக்கப்பட்டுள்ளது. பாடசாலையிலிருந்து 8 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முன்னாள் அதிபரிடம் உறுதிப்படுத்தல் கடிதம் பெற்று வந்தவர்களுக்கு விடுகைப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
மற்றொரு பாடசாலையில் விடுகைப் பத்திரம் பெற்றுக் கொள்ளச் சென்றவரிடம் மன்னிப்புக் கடிதம் கோரப்பட்டுள்ளது. பாடசாலைக் காலத்தில், அதிபர் விடுதிக்கு கல் எறிந்த சம்பவம் தொடர்பிலேயே மன்னிப்புக் கடிதம் தருமாறு கோரியதும் கடிதம் எழுதிக் கொண்டு வருவதாகத் தெரிவித்துச் சென்றவர் மீண்டும் பாடசாலைக்கு வரவில்லை.
யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைக்கு விடுகைப் பத்திரம் பெற்றுக் கொள்ள ஒருவர் சென்றுள்ளார். அவரது பெயர் பாடசாலை சேர்வுப் புத்தகத்தில் காணப்படவில்லை. அவர் கல்வி கற்ற காலப் பகுதியின் தினவரவுப் பதிவேடுகள் சோதனை செய்யப்பட்டன. அதில் அவரது பெயரும், சேர்விலக்கமும் காணப்பட்டன. அந்தச் சேர்விலக்கத்தின் அடிப்படையில் மீண்டும் சேர்வுப் புத்தகம் பரிசோதிக்கப்பட்டது.
குறித்த மாணவனின் பெயர் வெட்டப்பட்டு அதன் மேல் வேறு ஒருவரின் பெயர் எழுதப்பட்டுள்ளது. புதிதாக எழுதப்பட்ட பெயருக்குரிய மாணவர், யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் போது குற்றச் செயலில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப் பட்டிருந்தார். அவரின் பெயரே அவ்வாறு எழுதப் பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. (இ.5,105)

### சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட

## விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு எப்போது சேவையை ஆரம்பிக்கும்?

சாவகச்சேரி, பெப்.28
**சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தைக் கொண்ட விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அத்திபாரமிட்டு ஐந்து வருடங்களாகியும் வேலைகள் பூர்த்தியடையவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

ஏ/9 முதன்மைச் சாலை தாக்கலவை வீதியாக சீரமைப்பு மற்றும் நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, தென் பகுதி வடபகுதி போக்குவரத்து அதிகரிப்பு ஆகியவை காரணமாக மத்திய சுகாதார அமைச்சால், கடந்த 2015 ஆம் ஆண்டு ஏ/9 முதன்மை வீதியுடன் அண்டிய வவுனியா பொது மருத்து வமனை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை போன்றவற்றில் விபத்து மற்றும் அவசர சத்திர சிகிச்சைபிரிவு அமைக்க தலா 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.
2015 ஆம் ஆண்டு சாவகச்சேரி மருத்துவமனையில் இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் 3 கட்டங்களாக அதாவது 2016 ஆம் ஆண்டு முதல்கட்ட வேலையாக மூன்று மாடிக்கட்டடம் கட்டப்படுமெனவும், 2017 ஆம் ஆண்டு கட்டடத்துக்கான மின்சாரம் நீர் வசதி கட்டமைப்பு வேலைகளும், 2018 ஆம் ஆண்டில் மின்தூக்கி உட்பட சத்திர சிகிச்சைக்கான உபகரணங்கள் பொருத்தப்பட்டு 2018 இறுதிப் பகுதியில் மக்கள் பாவனைக்கு விடப்படுமெனவும், தெரிவித்திருந்தனர்.
கட்டடத்தின் முதல் கட்டமாக கட்டடம் அமைக்கப்பட்டும், இரண்டாம் கட்ட வேலையாக தளம் மற்றும் முதல் மாடி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஆண்டு முற்பகுதியில் ஒப்பந்தக்காரர்களால் கையளிக்கப்பட்டது. எனினும் நிதியின்மையால் இரண்டாவது மாடியின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமலும் மின்தூக்கி இல்லாததாலும் கையளிக்கப்பட்ட தளம் மற்றும் முதலாம் மாடி ஆகியவை மூடப்பட்டே உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
மருத்துவமனை நிர்வாகத்தினர் வேலையை முடித்து பொது மக்கள் பாவனைக்கு வழங்குவதன் அவசியம் குறித்து மத்திய சுகாதார அமைச்சுக்கு அறிவித்ததையடுத்து கடந்த வருடம் 4கோடி ரூபா ஒதுக்குவதாக சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.
ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நிதி விடுவிக்கவில்லை. வவுனியா பொது மருத்துவமனையிலும் யாழ் போதனா மருத்துவமனையிலும் அமைக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 2019 ஆண்டு முற்பகுதியில் திறக்கப்பட்டு பாதிக்கப்படும் நோயாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது.
ஆகவே சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு குருதிக்காப்பகம் உள்ள தொகுதிகளைக் கொண்ட கட்டடம் 2020 ஆண்டிலாவது மக்களுக்கு சேவைகள் வழங்குமா என மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர். (ஐ-9)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் நவீன முறையில் விவசாயம்

### திணைக்கள அதிகாரிகள் களப்பயணம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நவீனமயமாக்கல் திட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அதற்கமைவாக சர்வதேச சேவை வழங்குநர்களின் உதவியுடன் களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது என்று பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.
கொக்குளாய், கொக்குத்தொடுவாய், அளம்பில், உடையார்கட்டு, விசுவமடு போன்ற பிரதேசங்களுக்கு, குழுவினர் களப்பயணம் மேற்கொண்டனர்.
கொக்குளாய், கொக்குத்தொடுவாய், அளம்பில் போன்ற பகுதிகளில் இந்திய வில்செய்கை பண்ணப்படும் மாதுளைச் செய்கையையும், மாதுளைச் செய்கைக்கு நடுவில் நிலக்கடலை செய்கையை மேற்கொள்வதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. உடையார்கட்டு, விசுவமடுப் பகுதிகளில் கப்பல் வாழைச் செய்கையை விரிவுபடுத்தும் நோக்கில், 300 விவசாயிகளை உள்வாங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.
பப்பாசிச் செய்கையை விரிவுபடுத்தும் நோக்கில் தண்டுவான் பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது மாந்தைக் கிழக்கு, துணுக்காய் போன்ற பிரதேசங்களில் கொழுந்தோடை உற்பத்தியை அதிகரித்து, அதனைவெளிநாடுகளுக்குஏற்றுமதி செய்யும் நோக்கில் 50 விவசாயிகள் பரீட்சார்த்தமாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
போரில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த மூன்று வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சு-19)

## சைக்கிள்கள் கையளிப்பு

வவுனியா, பெப்.28
வவுனியா தரணிக்குளம் பகுதியில் வறுமை நிலையில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவருக்கு பொதுஜன பெரமுன கட்சியால் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.
வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலய வளாகத்தில் வைத்து நேற்றுவியாழக்கிழமை வழங்கப்பட்டன.
தரணிக்குளம் வட்டார அமைப்பாளர் ராகுலனின் வேண்டுகோளுக்கமையகடைவழப்பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் ரவீந்திரன் இதற்கான நிதியுதவியை வழங்கினார். (ஐ-18)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின் தடைப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்ப்பாண மாவட்டத்தில்-** கே.கே.எஸ். வீதி நாவலர் வீதி சந்தியிலிருந்து புகையிரதக்கடவை வரை, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி வீதி, கார்கில்ஸ் பி. எல். சி, செலிங்கோ லைவ் இன்சூரன்ஸ், பண்டத்தரிப்பு, பாணாவெட்டி, காஞ்சிபுரம், மாதகல், குசுமாந்துறை, யம்புகோளப்பட்டினம், காட்டுப்புலம், யம்புகோளப்பட்டினம், அல்வாய், மாலுசந்தி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாடசாலை, பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, ஏஆ வீதி, தம்பசிட்டி, சாளம்பை, சுப்பர்மடம் மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை ஆதார மருத்துவமனை, கல்வயல், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி, சந்திரபுரம், சரசாலை, கனகம்புளியடிச்சந்தி, நாவற்குழி, கோகிலாக் கண்டி, தச்சன் தோப்பு, மறவன்புலவு, தனங்களப்பு, அறுகுவெளி, கைதடி நுணாவில், பனை அபிவிருத்திச் சபை, சித்த மருத்துவ பீடம், வடக்கு மாகாண அலுவலகம் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** கண்ணகிபுரத்திலும் **வவுனியா மாவட்டத்தில்** சாம்பல்தோட்டம், குடுவெந்துபுலவு கிராமம், இழுப்பைக்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# பகலில் வீதி மின்விளக்குகளை மக்களே அணைத்துவிடுங்கள்!



கொழும்புத்துறை, பெப். 28

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள அநேகமான மின் விளக்குள் இரவு -பகல் தொடர்ச்சியாக ஒளிர்ந்துகொண்டிருக்கின்றன. பகலிலும் எரிகின்றமை குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனார்.

பொதுமக்களின் நலனுக்காகப் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் தொடர்ச்சியாக ஒளிர்வதற்கு அந்தந்தப் பகுதிகளுக்குரிய பொதுமக்களே காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீதியிலும் சிறிய பகுதியை உள்ளடக்கி ஆளிகள் பொருத்தப்பட்டுள்ளன. மின் விளக்குகளை இரவில் ஒளிரவிட்டுக் காலையில் அணைக்கும் பொறுப்பு அந்தந்தப் பகுதி பொது மக்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களின் அசமந்தப் போக்கே இந்த மின்சார வீண்விரயத்துக்குக் காரணம் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர். (கு-135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 • 07 • 1941

மறைவு 11 • 03 • 2019

அமரர் திருமதி

**அன்னப்பிள்ளை இரத்தினசிங்கம்**

(ஓய்வுபெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

*திதி:– வளர்பிறை பஞ்சமி*


அன்பால் எங்களை அரவணைத்த அன்பான அம்மாவே!
உற்றவர், உறவினர் யாவரையும் உயிராய் நினைத்து உதவிகள் பல செய்து
இன்னல்கள் பல கண்டும் துவளாது வாழ்வதனை வாழ்ந்து காட்டிய அன்னையே
ஓராண்டு சென்றதோ உங்களைப் பிரிந்து ஓயாத உங்கள் நினைவுகளுடன்
ஆத்மா இறைவனடி சேர வேண்டுகின்றோம்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

(CS:31539)(11.17)

**குடும்பத்தினர்.**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 10 • 10 • 1939

விண்ணில் 14 • 02 • 2013

**அமரர் கந்தவனம் சின்னையா சண்முகலிங்கம்**

(ஓய்வுபெற்ற உப அதிபர்)

திதி:- 28.02.2020

அன்பின் திருவுருவே!
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள்மயமானது
எட்ட முடியாத தொலைவு சென்று ஆண்டுகள் ஏழு என்ன
ஓராயிரம் ஆகலாம்.... காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மைவிட்டு நீங்காது..
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பாடசாலை வீதி,
கைதடி,நுணாவில்,
சாவகச்சேரி.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## இலவச மருத்துவ முகாம்

**McLeod Hospital**

**(இணுவில் வைத்தியசாலை)**

**கே.கே.எஸ்.வீதி இணுவில்**

**021 224 1569, 021 224 3648, 076 394 4346**



அன்பான வாடிக்கையாளர்களுக்கு
நாளை (29.02.2020) சனி காலை 9 மணி - மாலை 4மணி அன்று எமது மக்லியோட் வைத்தியசாலையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற இருப்பதால் நோயாளர்கள் அன்றைய தினம் முற்றிலும் இலவசமாக பின்வரும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

01) இலவச வைத்திய ஆலோசனை
02) இலவச கொலஸ்ட்ரோல் (Lipid Profile) மற்றும் குருதியில் சீனி அளவுப் பரிசோதனை (FBS) - 40 வயதிற்கு மேற்பட்டவர்கள்
03) இலவச பற்சிகிச்சை ஆலோசனை
04) இலவச அடிப்படை மருந்துகள்

மற்றும் மேலும் பல சேவைகளை பெற்று நலன் அடையுமாறு அறியத்தருகின்றோம்.

காலம் : 29.02.2020
நேரம் : காலை 09.00 - மாலை 4.00 மணிவரை

(cs.31543) (13.17)


## மரண அறிவித்தல்



**திருமதி கமலாதேவி பரமலிங்கம்**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பரமலிங்கம் 26.02.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் நாகேஸ்வரி (தற்பொழுது ஜேர்மனியில் வசிக்கின்றார்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளிநாயகி தம்பதிகளின் மருமகளும், பரமலிங்கத்தின் அருமை மனைவியும், சுசிலாதேவி (இருபாலை), நிர்மலாதேவி (ஜேர்மனி), சறோசாதேவி (கனடா), சகுந்தலாதேவி (ஜேர்மனி), வசந்தாதேவி (ஜேர்மனி).பாஸ்கரன் (கோப்பாய்), கௌசலாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஆறுமுகம் (இருபாலை), தேவராசா (ஜேர்மனி), மகேந்திரராசா (கனடா), சாம்பசிவம் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (ஜேர்மனி), நிர்மலா (கோப்பாய்).மதியழகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், உஷாநந்தினி (யாழ்ப்பாணம்), லிங்கேஸ்வரன் (லண்டன்), துளசி (வவுனியா), உதயசங்கர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாபு, மாலினி (லண்டன்), சித்திராங்கன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும்.சம்ளா, நிமாசா, நிகான், தயானிக்கா, நிசிச்கேஸ், நிதுசிகா, ஹரிஸ், தினேஸ், வக்சினி ஆகியோரின் பேர்த்தியும்.ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலிலி மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனக்கிரியை நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

சுதுமலை.

**சு.பரமலிங்கம் (கணவர்)**

**077 264 5663**

(CS/31544)(11.17)

# அரசின் இயலாமை வெளித் தெரிகிறது

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, பெப்.28

இந்த அரசின் இயலாமை ஒவ்வொரு நாளும் வெளிப் படுகின்றது என மக்கள் விடுதலை முன்னணி குற்ற ஞ்சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


கோத்தாபய ஜனாதிபதியாக மாறியிருந்தாலும் கொள் கைகள் அப்படியேதான் இருக்கின்றன. பொருளாதா ரத்தில் சிறப்பான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்த அரசு தொடர்ந்து வாக்குறுதிகளை வழங்குகின்றது. ஆனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அரசு தீர்க்கவில்லை.

புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுத் தற்போது 100 நாள்கள் கடந்துள்ள நிலையில் கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு அதன் இயலாமையை மக்களுக்குக் காட்டியுள்ளது.- என்றார். (ஏ)

# கொரோனா நீங்க பிரார்த்திப்போம்

## அருட்தந்தை அழைப்பு




மன்னார்,பெப்.28

நாம் பல்வேறு மதங்களைப் பின் பற்றுபவர்களாக இருந்தாலும், மனித நேயத்தோடு நாம் வழிபடும் கட வுளிடம் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, இறந்த ஆன்மாக்களுக்காகவும், அவர்களை இழந்து துயரப்படும் மக்களுக்காகவும் வேண்டுதல் செய்வோம் என்று மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் அழைப்பு விடுத்தார்.

உலகையே அச்சுறுத்தும் கொரோனா வைரஸால் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கான இரங்கல் வழி பாடு மன்னார் கறிற்றாஸ்வாழ்வுதய மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ் வில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸ் தாக்கம் படிப்படியாக பல நாடுக ளில் பரவி வருகின்றது. சீனாவுக்கு அடுத்தாக இத் தாலி, தென்கொரியா போன்ற நாடுகளுக்கும் பரவி யுள்ளது.எனவே இன, மத வேறுபாடின்றி நாம் பல் வேறு மதங்களைப் பின் பற்றுபவர்களாக இருந்தாலும், துயரப்படும் மக்களுக்காகவும் வேண்டு தல் செய்வோம். இதுவே மனித மாண்பை மதிக்கும் செயலாகும்.-என்றார்.

நிகழ்வில் கறிற்றாஸ் வாழ்வுதயப் பணியாளர்கள் மற் றும் வாழ்வுதயத்தில் கணி னிப் பயிற்சியைப் பெறும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-56)

# குப்பை போடும் பம்பைமடுவில் வீடுகள் அமைப்பது நிறுத்தம்

## சுகாதார வசதி ஏற்படுத்துவது குறித்தும் ஆராய்வு

வவுனியா, பெப். 28

வவுனியா பம்பைமடு பகுதியில் குப்பை கொட்டப்படும் இடத் தில் வீடுகள் அமைக்கப்பட்டு அவை தொடர்பில் சர்ச்சை நீடித்துவரும் நிலையில், வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடை பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அது பெரும் அமளிதுமளியானது. இறுதியில், அந்தப் பகுதியில் வீடுகள் அமைப் பதை நிறுத்துவது என்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துவது என் றும் கூறப்பட்டு இந்த விடயம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட் டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. அதில் குப்பைபோடப்படும் இடம் தொடர்பில் பேசப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம், "குப்பை கொட்டும் இடத்தில் வீடுகள் அமைக்கக் காணி வழங்கப்பட்டது தவறு. வவுனியாவில் பல வருடங்க ளாகக் குடியேறியுள்ள மக்களுக்கு இதுவரையில் காணி உறுதி கிடைக் கப்பெறவில்லை. ஆனால், புதிய சாளம்பைக் குளத்தில் அண்மைக் காலத்தில் குடியேறியவர்களுக்கு காணி உறுதி வழங்கப்பட்டுள்ளது." என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் இணைப்பாளரும் வவு னியா நகரசபை உறுப்பினருமான அப்துல் பாரி, "ஆயிரத்து 500 பிள் ளைகள் அந்தப் பகுதியில் படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் மக்கள் இல்லையா? சட்ட ரீதியாகத் தான் குறித்த இடம் வழங்கப்பட்டுள் ளது" என்று தெரிவித்தார்.

அதற்கு, தவிசாளர் நடராஜசிங்கம், "குப்பை கொட்டும் இடத்தில் வீடு அமைப்பது தான் சட்டமா? என்று கேள்வியெழுப்பினார். தவிர, "பம் பைமடுப் பகுதியில் நீண்டகாலமாக குப்பை கொட்டப்படுகின்றது. அந்த இடத்தில் மக்கள் வந்து குடியேறினர். அவ்வாறு குடியேறும்போதே நாங் கள் இந்தப் பிரச்சினையைக் கூறி னோம். அவர்கள் கேட்கவில்லை. அமைச்சரின் செல்வாக்கில் வந்து குடியேறிவிட்டு தற்போது அகற்று என்றால் சரியா? அந்த இடத்தை அகற்ற முடியாது. தவிர, இந்த விட யம் நீதிமன்றுக்கும் கொண்டுசெல் லப்பட்டு தீர்ப்பு உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை மாற்றமுடியாது. வேண்டு மானால் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தால் சுகாதார நடவடிக்கை மேற்கொண்டு உதவமுடியும்." என் றும் தவிசாளர் தெரிவித்தார்.

இதன்போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அது பெரும் அமளிதுமளியானது.

வவுனியா மாவட்டச் செயலர் எஸ். எம்.சமன் பந்துலசேன, "வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைத் தவி சாளர் குப்பைகளை இலகுவான முறையில் அகற்றுவதற்கு நடவ டிக்கை மேற்கொண்டு வருகின்றமை நாம் யாவரும் அறிந்த விடயம். அவர் பல தொழிநுட்ப முறைகளில் இதனைக் கையாள்கின்றார்." என்று தெரிவித்தார்.

தவிர, "புதிய சாளம்பைக்குளம் பகு தியில் புதிதாக வீடுகள் அமைப்பதை உடன் நிறுத்தவும்" என்று மாவட்டச் செயலர் வவுனியா பிரதேச செயல ருக்கு பணித்தார். அதனையடுத்து அமளிதுமளி சுமுகமானது.

"ஒரு சில அரசியல்வாதிகளின் இலாப நோக்கத்துக்காகத்தான் இந்த இடத்தில் வீட்டுத்திட்டம் அமைக் கப்பட்டது.

இருந்தாலும் மக்கள் பாதிப்படை கின்றமையை ஏற்றுக்கொள்ள முடி யாது. அங்கு குடியேறியுள்ள மக்கள் பாதிப்படையாத வகையில் தொழி நுட்ப முறையை மாற்றி குப்பை களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். (த-18,105)

# நிர்வாகம், யாப்பு இல்லாத கட்சிதான் தமிழ்க் கூட்டமைப்பு

## சாடுகின்றார் சர்வேஸ்வரன்

மருதங்கேணி, பெப். 28

முப்பது லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் வாக்குகளில், அவர்களுடைய செல்வாக்கில் இருக்கின்ற தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு யாப்பு இல்லை, செயலாளர் இல்லை, பொருளாளர் இல்லை என்று வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரி வித்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் கூட்ட ணியின் பரப்புரைக் கூட்டம், பருத்தித் துறை தம்பசிட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்கள் 8.7 வீதத்தால் பிறப்பு வீதம்அதிகரிப்பு வடக்குகிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் எதிர்ப்பதற்கு காரணம் இவ் வாறான இனப்பெருக்க வீத அதிகரிப்பால். அவர்கள் இன்னும்10 ஆண்டுகளில் அவர் களுடைய ஆதிக்கத்தில் இந்தப் பகுதிக ளைக் கொண்டுவந்து தமிழ் மக்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையில் இறங்கிவி டுவர். வடக்கு மாகாணத்தில் 7 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.இராணுவம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. ஆகவேஐந்து தமிழருக்கு ஒரு இராணுவம் காணப்படுகின்றது. -என்றார். (த-60)

# தாக்குதல் சம்பவங்கள்; தம்பதி உட்பட ஐவர் காயம்

சாவகச்சேரி,பெப்.28

தென்மராட்சி பிரதே சத்தின் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த தம்பதி உட்பட ஐவர் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள் ளன.

கெற்பேலி மேற்கில் 29 வயது 30 வயதுடைய இரு பெண்களும், மந்துவில் மேற்கில் 35 வயது 29 வயது தம்பதியும், மறவன் புலவில் 39 வயது குடும்பப் பெண் ணும் தாக்குதல்க ளில் காயமடைந்த னர். (ஐ-9)

# 10 நூல்களின் அறிமுக விழா

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் காரைக்கவி யின் 10 நூல்களின் அறிமுக நிகழ்வு எதிர் வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமைமாலை4 மணிக்கு கல்லூரிக் கவியரங்கத்தில் நடை பெறும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் தலை மையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியி யற் கல்லூரியின் மேனாள் பீடாதிபதி க . பேனாட், கௌரவ விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் மேனாள் பீடா திபதி கலாநிதி சு. அமிர்தலிங்கம் ஆகி யோர் கலந்து கொள்வர்.

அம்மா எனும் ஆசியாவின் அதிசயம், குறுக் கால போவானே கோதாரி விழுவானே, என் னத்தை எழுதி என்னத்தை கிழிக்க, என் னமோ இருக்கிறோம், என்னடா மோனை என்னத்தை எழுதிறாய், தமிழ் பேசும் தந்த கணபதி தமிழ் வளர்த்த மானுடம், நீரிருக்க பயமேன், திருவ ள்ளுவர் என்னும் தெய் வீக முகாமையாளர், ஆனந்தனும் அவ வும் ஆகிய நூல்கள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன. (க-159)

# விசர் நாய் அடித்துக்கொலை

கொழும்புத்துறை, பெப். 28

கொழும்புத்துறையில் மாணவர்கள் உட்பட 6 பேரைப் பதம்பார்த்த நீர்வெறுப்பு நோய்க்கு உட்பட்ட விசர் நாய்க்குட்டியை யாழ்ப்பாண மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் நேற்றுமுன்தினம் அடித்துக் கொன்றனர்.

விசர் நோய்க்குட்பட்ட அந்த நாய் தொடர்பாக யாழ்ப்பாண மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டது.

சபையினர் அந்தப் பகுதியில் ஒலி பெருக்கி மூலமாக பொதுமக்களுக்குப் பாதுகாப்பு எச்சரிக்கை வழங்கினர். இந்த நிலையில், கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் குறித்த நாய் நடமாடுகின்றது என்று மக்கள் வழங்கிய தகவலையடுத்து அது அடித்துக் கொல்லப்பட்டது. பின்னர் பரிசோதனைக்காக நாயின் சடலத்தை சுகாதாரப் பகுதி மிருக வைத்திய அதிகாரிகள் எடுத்துச் சென்றனர். (த-135)

*பிரான்ஸ் வாழ் நெடுந்தீவு உறவுகள்*

# பாதிப்புற்ற இருவருக்கு டிராக்டர் அன்பளிப்பு

முல்லைத்தீவு, பெப். 28

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் போரால் பாதிக்கப்பட்ட இரு குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது. 23 லட்சத்து 89 ஆயிரம் ரூபாவில் உழவு இயந்திர கலப்பையுடனான உழவு இயந்திரத்தை புலம்பெயர்ந்து வாழும் கொடையாளர்கள் வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசிப்பவர்களுமான இராசரத்தினம் றஞ்சன், தாமோதரம்பிள்ளை வரதன், குமாரசாமி மனோகரன் ஆகிய மூவரும் இணைந்து உழவு இயந்திரத்தை வழங்கினர்.

பாலிநகர் பாண்டியன் உறவுகள் அமைப்பின் ஏற்பாட்டில் உழவு இயந்திரம் வழங்கப்பட்டது. இந்த உழவு இயந்திரம் மூலமாக வருமானம் ஈட்டிக்கொள்ளும் அதேவேளை, மேலதிகமான வருமானத்தைக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் நோக்கில் இது வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த -19)



*தென்மராட்சி பிரதேச செயலக*

# இளைஞர் எம்.பியாக ஜனார்த்தனன் தெரிவு

கொடிகாமம், பெப். 28

2020ஆம் ஆண்டுக்கான இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த சனிக்கிழமை பிரதேச செயலகங்களில் இலத்திரனியல் முறைமூலம் நடைபெற்றது. தென்மராட்சி பிரதேச செயலக தேர்தல் தொகுதியில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராக மீசாலை சீமா இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ. ஜனார்த்தனன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரே வடக்கு மாகாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளார் (406) என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் இலங்கை ரீதியாக 27ஆவது இடத்தையும் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# தீர்மானத்திலிருந்து விலகியது நாட்டு மக்களின் வெற்றியாம்

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, பெப்.28

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்தே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகியது. இது சர்வதேச அரங்கில் நாட்டு மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.



இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கையின் அரசமைப்புக்கும் இறையாண்மைக்கும் முற்றிலும் முரணானவையாகும்.

தீர்மானங்களிலுள்ள சில பரிந்துரைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் காணப்பட்டன.

இவை கடந்த காலங்களில் பல வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தின.

இலங்கையின் உள்ளக விவகாரங்களின் சுயாதீனத்தன்மைக்கு சவால் விடுக்கும் வகையிலான பரிந்துரைகளாக பொலிஸ் மற்றும் இராணுவ சேவை மீள் திருத்தம், காணி விடுவிப்பு, அதிகாரப் பகிர்வு, பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் திருத்தம், குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கல் உள்ளிட்ட 20 பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டன.

இந்தப் பரிந்துரைகள் அடங்கிய தீர்மானங்களுக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியமை தேசத் துரோக செயற்பாடாகும்.

நாட்டின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான அனுமதியை நல்லாட்சி அரசு 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வழங்கியது.

ஆனால, இந்தச் சபை நடுநிலையாகச் செயற்படும் அமைப்பாகக் காணப்படவில்லை.

2017ஆம் ஆண்டு வல்லரசு நாடான அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் சபையைக் கடுமையாக விமர்சித்து அதிலிருந்து விலகியமை அந்தச் சபையின் சுயாதீனத்தன்மை தொடர்பான தன்மையை வெளிப்படுத்துகின்றது- என்றார். (எ-22)

# சனசமூக நிலையங்களுக்கு 10 ஆயிரம் வீதம் மானியம்

சாவகச்சேரி,பெப்.28

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு நகரசபையால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் மானிய நிதி வழங்கப்படவுள்ளது. சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் மேம்பாடு கருதி சபை உறுப்பினர் க.கஜிதனால்கொண்டு வரப்பட்ட முன்மொழிவு, சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு கடந்த வருடம் சபை நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக் கொடுப்பனவை வழங்க ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளதாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நகரசபைக்கு அறிவித்துள்ளார். சபையின் அலுவலர்கள் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதென தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (ஐ-9)

# ஆண்டு விழா நாளை

கொழும்புத்துறை,பெப்.28

கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் 7ஆவது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அரியாலையிலுள்ள சர்வோதய அமைப்பின் மண்டபத்தில் நடைபெறும்.

அமைப்பின் இயக்குநர் அ.மௌலி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகர் மாவை வி. நித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தற்கொலைகளைக் தடுப்பது எவ்வாறு என்னும் தொனிப்பொருளில் உரையாற்றுவார்.

சஞ்சை சிவாவின் இயக்கத்தில் உருவான சமூக விழிப்புணர்வூட்டும் 'தளராதே' குறும்பட வெளியீடு, மனம்விட்டுப் பேசு என்னும் நாடகம், பட்டிமண்டபம் என்பன நடைபெறும். (க-135)

# களவாடப்பட்ட பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 28

முகமாலை இந்திராபுரத்தில் கடந்த மாதம் 24ஆம் திகதி மூன்று வீடுகளில் களவாடப்பட்ட பொருள்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் தொலைபேசி என்பன பளைப் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிஸ்கவர் ரக மோட்டார் சைக்கிள், 3 பவுண் தங்கச் சங்கிலி, 25 ஆயிரம் ரூபா பணம், 3 தொலைபேசிகள் என்பன திருடர்களால் களவாடப்பட்டிருந்தன என பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. சில தினங்களுக்கு முன்னர் வெற்றிலைக்கேணி கட்டைக்காடுப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்திராபுரத்தில் மோட்டார் சைக்கிளை களவாடி மிருசுவிலில் உதிரிப்பாகங்களைக் கழற்றியெடுத்து, யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

பொலிஸார் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டை ஐந்து சந்திப் பகுதியிலிருந்து மீட்டுள்ளனர். (ஒ.5,105)

# டைனமெற் பாவித்து மீன்பிடியா? கைதான இருவருக்கும் பிணை

பூநகரி பிரதேச நாச்சிக்குடா கடற்பரப்பில் 'டைனமெற்' பாவித்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு மீனவர்களும் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட மீன்கள் டைனமெற் பாவித்துப் பிடிக்கப்பட்டனவா என்பதை உறுதிசெய்ய அவற்றில் ஒரு பகுதியை 'நாரா' நிறுவனத்துக்கு அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டது. ரோந்துசென்ற கடற்படையினர் மீனவர்களுடன் 250 கிலோக்கிராம் மீன்களையும் படகையும் கைப்பற்றி கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினிடம் ஒப்படைத்தனர். திணைக்கள அதிகாரிகள் மீன்களுடன் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர். அதன்போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எஞ்சிய மீன்களை விற்று பணத்தை நீதிமன்றில் செலுத்துமாறும் உத்தரவிட்டது. (த-115)

**நிர்வாக உத்தியோகத்தர் தேவை**

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உயர் கல்வி நிறுவனத்தில் அலுவலக மற்றும் நிர்வாகப் பணிகளினை மேற்கொள்வதற்கு பொருத்தமான உத்தியோகத்தர் தேவை. 20 தொடக்கம் 30 வயதிற்குட்பட்ட ஆர்வமுள்ள, அனுபவமுள்ளவர்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 05.03.2020**

**தொடர்புகளுக்கு** : 071 869 1691

**மின்னஞ்சல்** :2018jkc@gmail.com

# வவுனிக்குளம் மாங்குளம் பிரதான வீதி சேதம்

## போக்குவரத்து பாதிப்பதாக அப்பகுதி மக்கள் விசனம்

முல்லைத்தீவு,பெப்.28

முல்லைத்தீவு மாவட்டம், வவுனிக்குளம் மாங்குளம் பிரதான வீதியானது நீண்ட காலமாக சீரின்றிக் காணப்படுவதால் மக்கள் பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மாங்குளத்திலிருந்த வவுனிக்குளம், பாண்டியன் குளம்,அம்பாள்குளம், மல்லாவி போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பிரதான பாதையே இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக இவ்வீதியில் அமைந்துள்ள எய்பண்டிய குளத்தினுடைய தண்ணீரை வெளியேற்றுகின்ற பாலம் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் பாலத்தைக் கடந்து செல்வதில் மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதுடன், பாலத்தின் சேதம் தொடர்பில் அடையாளப்படுத்தப்படாமல் காணப்படுவதனால் விபத்துக்கள் இடம்பெறும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

அத்துடன் வீதி சீரின்மையைக் காரணம் காட்டி தனியார் போக்குவரத்து சேவை தற்போது நடைபெறுவதில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2012ஆம்ஆண்டுக்கு முன்பு இநத வீதியினூடாக ஒரு நாளுக்கு நான்கு தனியார் பேரூந்துக்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததாகவும், தற்போது காலை 6மணியளவில் மல்லாவி மாங்குளம் வரை ஒரு அரச பேருந்து சேவை மாத்திரமே இடம்பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் அம்பாள் குளம் மற்றும் வவுனிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த மக்களே மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே தமது இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு உரிய வீதியை சீரமைப்பதுடன், முறையான போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தித்தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-246)

## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 10 . 1943 | 27 . 02 . 2020 |

### ஆறுமுகம் சோமசுந்தரம்


காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் நேற்று (27.02.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் செல்லாச்சி தம்பதிகளின் ஆசை மருமகனும் கெங்காதேவியின் அன்புக்கணவரும் தருமரின் அன்புச்சகோதரனும் சுபத்திராதேவி. சுஷேந்திராதேவி. சுரேந்திரராசா. சியாமளாதேவி (சுவிஸ்) ரபேந்திரராசா சுதாமளாதேவி (லண்டன்). சிவராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் கமலேஸ்வரன். பிரியதர்ஷினி (ஆசிரியை - யா/ சென்மேரிஸ் வித்தியாலயம்) சற்குணம் (சுவிஸ்). நகுலா (பிரதேச செயலகம் - நல்லூர்). சத்தியதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரதி. மயூரன். அகீபன். மருணா. கஜானன். தீபிகா அக்ஷிதா. அக்ஷரா. அபிஷா. அபிஷன். காலஞ்சென்ற அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.02.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**077 603 2504**

**நாவலடி கேணி வீதி, காரைநகர்.**



### Dr. பொன்னுத்துரை சிவபாலன்

நீர்வேலியை பிறப்பிடமாகவும். உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட **Dr.**பொன்னுத்துரை சிவபாலன் கடந்த (25.02.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நர்சிகா பாலேந்திரா, தில்சிகா கிருபாகரன், கிருசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், வாஷ்னா, ரெல்வின், அகீவ், திமேகா, கிஸ்ரன், கிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவனேசன், சிவேந்திரன் மற்றும் சிவதாசன், காலஞ்சென்ற சிவராணி மற்றும் சிவாநந்தன், சிவசுப்பிரமணியம். சிவகுமாரி, தியாகி பொன். சிவகுமாரன் மற்றும் சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.03.2020) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவு தின வீட்டுக்கிருத்திய அழைப்பு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 . 01 . 1949 | 29 . 01 . 2020 |

### அமரர் வேலுப்பிள்ளை விசுவலிங்கம்

(ரஜினி வீடா ஸ்டோர்ஸ், முன்னாள் உரிமையாளர், வான் சாரதி)

அவர்களின் 31ஆம் நாள் நினைவுதின பிரார்த்தனை இன்று (28.02.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**செல்வம் மில் வீதி,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.**
**077 435 7920**

**குடும்பத்தினர்.**

## இரண்டாம் வருட நினைவுநாள்

"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"



### யோசெப் அருளானந்தம் (ஜெயம்)

[முன்னாள் இ.போ.ச.சாரதி.
"தர்சினி" மினிபஸ் உரிமையாளர் – 769]


பூவுலகில் 18.05.1943
மகிமைக்குள் 28.02.2018

பழைய பூங்கா வீதி. சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**
டச்சுவீதி, உடுவில், சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் மகேஸ்வரன்



மட்டுவில் நாடு மேற்கு. பூநகரியைப் பிறப்பிடமாகவும். பொலிஸ் நிலைய வீதி. பளை நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் மகேஸ்வரன் கடந்த **(26.02.2020)** புதன்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளையின் பாசமிகு கணவரும் மஞ்சுளா. சியாமளா. மயூரன் (நியுஸ்லாந்). மகுந்தன் (சுவிஸ்லாந்). சர்மிளா. சுகிர்தன். மதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன் (லேத் உரிமையாளர்). ஜெயவரதன் (சானுஜா உணவகம்- பளை). சுரேந்திரன் (செழியன்). குயினி (சுவிஸ்). விஜி (நியுஸ்லாந்). கௌசி (கனடா) ஆகியோரின் நேசம்மிகு மாமனாரும் கோபிராம். துவாரகன். விதுஷன். லதுஷன். நவிஷாந். சானுஜா. ஆர்த்தி. துபேரா. தஸ்மிதன். ஆதித். ஆரகி. மானுஷா ஆகியோரின் பிரியமான பேரனும் மனோன்மணி (ஆலங்கேணி). காலஞ்சென்ற கதிரவேலு. ஆறுமுகம் (பூநகரி). மங்களம் (வவுனியா). வாசுதேவன் (பூநகரி). காலஞ்சென்ற கருணாதி ஆகியோரின் பிரியமான உடன்பிறப்புமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று **(28.02.2020)** வெள்ளிக் கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் பளை மலையாங்காடு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பளை நகரம், பளை.** **தகவல்: மனைவி. மக்கள், மகன் (சுகிர்தன்)**

## இலங்கை...

அதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக்காக உள்ளகப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவது என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டையும் அவர் அடியோடு நிராகரித்தார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 43ஆவது அமர்வில் நேற்று இலங்கை குறித்த வாய்மூல அறிக்கையை முன்வைத்துப் பேசும் போதே மிச்செல் பச்லெட் இலங்கை அரசின் நிலைப்பாட்டை நிராகரித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

'உள்நாட்டு செயன்முறைகள் ஊடான தனிப்பட்ட முயற்சிகள் கடந்த காலங்களில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதில் தொடர்ந்து தோல்வியுற்றன. எனவே, இலங்கையில் மற்றொரு உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுவை அமைப்பது என்பது இந்தச் செயன்முறையை முன்னோக்கிக் கொண்டு செல்லும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அத்தோடு இதன் விளைவாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது. அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மீண்டும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஐ.நாவின் தீர்மானங்கள் குறித்து இலங்கையின் புதிய அரசு மிகவும் மாறுபட்ட அணுகுமுறையை அறிவித்திருப்பது கவலையை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் இந்த அறிவிப்பால் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான முயற்சிகளைத் தடுக்கும் அபாயங்கள் உள்ளன. இலங்கை அரசு தனது அனைத்து மக்களுக்காகவும் செயற்பட வேண்டும். அனைத்து சமூகங்களின் தேவைகளையும், குறிப்பாக சிறுபான்மையினரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த சில ஆண்டுகளாகக் கிடைத்த நன்மைகளைப் பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஆதரவை வழங்குவதை உறுதி செய்ய அரசைக் கோருகின்றேன். அனைத்து சமூகங்களைப் போலவே நீதி மற்றும் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கும் தகுதி உள்ளது.

இலங்கையின் சுயாதீன நிறுவனங்கள், 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் பலப்படுத்தப்பட்டுள்ளன. இது ஜனநாயகக் கட்டமைப்பில் ஒரு முக்கிய தூணாகும். மேலும், சிவில் சமூகம் மற்றும் சுயாதீன ஊடகங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, பாதுகாப்பு அமைச்சின் கீழ் அல்லது ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளின் கீழ் மக்களின் செயற்பாடுகளை நகர்த்துவதற்கான சமீபத்திய போக்குக் குறித்து நான் கவலையடைகின்றேன்.

மனித உரிமை அமைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான கண்காணிப்பு போன்ற புதிய அறிக்கைகளும் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுக்கத்தக்க பேச்சு, பாதுகாப்பு அச்சுறுத்தல், சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கை நடவடிக்கைகள், தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்து வெளிப்படுத்துகின்றது.

கடந்த கால மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனையை இலங்கை இன்னும் வழங்கவில்லை. அல்லது இவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான பாதுகாப்பு துறை குறித்த சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளவில்லை என்பதே அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. இவை குற்றவியல் நீதி முறைமைக்குள் தொடர்ந்து நிலவும் பிரதான தடையாக உள்ளது' - என்றார்.

(ம-22)

## யாழில்...

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமத்துக்கு 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு மூலம் மக்களுக்குத் தேவையான கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் சிறிய வீதி, பாலம், விவசாய உற்பத்தி, களஞ்சிய வசதி, சந்தை அபிவிருத்தி, சிறிய குளம், அணைக் கட்டு, விவசாயக் கிணறு, கிராமிய மருந்தகம், பாடசாலை அடிப்படை வசதி, யானை பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுமார் 689 திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளன. இதற்கு 870 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செயற் திட்டத்துக்கான அனுமதியும் கிடைத்துள்ளது. இதனை நாம் துரிதமாக நடைமுறைபடுத்துவதற்கு எண்ணியுள்ளோம். சில திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்தின் 30 கருத்திட்டங்களுக்கு 15.5 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் சுமார் 6 வீடுகள் என்ற அடிப்படையில் 60 வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்குரிய நிதி 36 மில்லியன் ரூபா. முதல் கட்டமாக 7 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சால் 200 வீடுகள் எமது மாவட்டத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன- என்றார்.

(ஒ.5,7)

## நிதி...

பிக்கப்படவுள்ளது.

கோத்தாபய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் சப்ரிகம திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராமத்துக்கும் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் அபிவிருத்தித் திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவை நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் இந்தத் திட்டம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட் கிழமை நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், இந்தத் திட்டங்களுக்கான அடிக்கல் நடுகைகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர் ஊடாக முன்னெடுக்க முடியாது. அதற்காகவே அவசர அவசரமாக இந்தத் திட்டங்கள் நாளை ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமத்துக்கும் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்குரிய வேலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின் மொத்த நிதியின் 20 சதவீதமே தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும், ரணில் அரசு கிராமிய உட்கட்டுமான அபிவிருத்திக்கு கணக்கறிக்கை ஊடாக ஒதுக்கிய நிதியையே, இந்தத் திட்டத்துக்கு கோத்தாபய அரசு ஒதுக்கியுள்ளது.

சப்ரிகம திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வரும் அரசு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக எஞ்சிய நிதியை ஒதுக்க வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முடியாது இடை நடுவில் நிறுத்தவேண்டி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## அபிவிருத்திக்...

நாதனுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்களை அழைக்காமல் பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தை நடத்தும் அவரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு போராட்டம் நடத்தப்பட்டது.



பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களுக்காக யாருக்கும் பிரத்தியேக அழைப்புக்கள் விடுக்கப்படும் சம்பிரதாயங்கள் கிடையாது எனவும் மக்களின் அபிவிருத்தி மீது அக்கறை கொண்ட சமூக ஆர்வலர்கள் மற்றும் சேவையாளர்கள் விருப்பத்துடன் கலந்து கொள்ள முடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இதன் போது குறிப்பிட்டார்.

தீவகத்திலுள்ள ஊர்காவற்றுறை, நெடுந்தீவு மற்றும் வேலணைப் பிரதேசங்களுக்கான பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் வேலணைப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அங்கஜன் இராமநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

கூட்டத்தில் பங்கேற்பதற்கு வந்த அங்கஜன் இராமநாதனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவரை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்பட்டது. நெடுந்தீவுப் பிரதேச சபை, வேலணைப் பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர். வேலணைப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், அங்கஜனை பிரதேச செயலகத்துக்குள் செல்ல முடியாதவாறு மறித்தனர். பிரதேச சபை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினரின் குழுவினருக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் உதவியாளர், தம்மை தரக்குறைவாகப் பேசியதாக பிரதேச சபை உறுப்பினர்கள் கூறினர். அத்துடன், அங்கஜன் முன்னெடுக்கும் தன்னிச்சையான செயற்பாடுகள் தொடர்பில் நாம் தட்டிக் கேட்போம் என்று பயந்துதான் தமக்கு கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம் சுமத்தினர். (ஒ.5,7,105)

## இரண்டு...

அதேபோல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி என்பனவற்றுக்கு இடையிலான வீரர்களின் போரான இரு நாள் துடுப்பாட்டம் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

(ம)

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 896
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.27
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,808,510/-
வெற்றி இலக்கங்கள்
11 16 17 66 R
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1651
சீட்டிழுப்பு திகதி 27.02.2020
வெற்றி இலக்கங்கள்
03 10 40 53 U
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.47, 499, 728 /=


ராசி அதிர்ஷ்டம்
திகதி 27.02.2020
வெற்றி வாரம் 2782
வர்ணம் கபிலம்
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்
14 27 48 55
வெள்ளிக். கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.607.056/=
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 4959
ரூ.100 பரிசுக்காக 685
28.02.2020 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# அச்சுறுத்துகின்றது அமெரிக்கா

## சாடுகின்றது ஈரான்

தெஹ்ரான், பெப்.28

ஈரானில் கொரோனா வைரஸ் தொடர்பான அதீத அச்சுறுத்தலை அமெரிக்கா ஏற்படுத்துகின்றது என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஹசன் ரௌஹானி குற்றம் சாட்டியுள்ளார்.



கொரோனா வைரஸ் தொடர்பான அச்சுறுத்தலை ஈரானில் அமெரிக்கா ஏற்படுத்துகிறது என்றும் இந்த வைரஸ் குறித்த அதீத பயத்தை அமெரிக்கா ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி ஹசன் ரௌஹானி தெரிவித்துள்ளார்.

ஈரானின் கோவிட்19 என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ் பாதிப்பின் தீவிரம் அதிகமாகி வருகிறது. சுமார் 95 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதுவரை 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஈரானில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதைக் குறிப்பிட்டு கோவிட் 19 பாதிப்பின் உண்மை நிலையை உலக நாடுகள் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ வலியுறுத்தி இருந்தார்.

அது தொடர்பாகவே ஹசன் ரௌஹானி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஏ)

# இயற்கை இடரால் ஐவர் சாவு

ஜகார்த்தா, பெப்.28

இந்தோனேசியாவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேஷியா நாட்டில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. அந்த நாட்டின் மேற்கு ஜாவா மாகாணத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக மக்கள் வசிக்கும் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். வெள்ள இடரால் 5 பேர் உயிரிழந்தனர். 3 பேர் மாயமாகியுள்ளனர். (ஏ)

# சரகேப்பை விடவில்லை

## ரஷ்ய ராணுவம் தெரிவிப்பு



டமஸ்கஸ், பெப்.27

சிரியாவின் முக்கிய நகரமான சரகேப்பை சிரிய கிளர்ச்சியாளர்கள் அரசு படைகளிடமிருந்து மீண்டும் கைப்பற்றியதாக வெளியான செய்திகளை ரஷ்ய இராணுவம் மறுத்துள்ளது.

ரஷ்ய இராணுவத்தை மேற்கோள் காட்டி ரஷ்ய ஊடகம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஆதரவு தாக்குதலில் சிரிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த சரகேப்பை அவர்கள் மீண்டும் கைப்பற்றினர் என துருக்கிய இராணுவத்தால் ஆதரிக்கப்படும் சிரிய கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருந்தது. எவ்வாறாயினும், ரஷ்ய இராணுவ தகவல்கள், அந்த நிகழ்வுகளை நிராகரித்த துடன், சராகேப் மீதான கிளர்ச்சி தாக்குதலை சிரியாவின் அரசப் படைகள் வெற்றி கரமாக முறியடித்ததாகவும் கூறினார். (ஏ)

# 'செல்போன்' பயன்படுத்த தொடங்கியுள்ள வாரன்!

நியூயோர்க், பெப்.28

உலகின் 4ஆவது பணக்காரர் வாரன் பப்பெட் தற்போது முதன் முறையாக 'ஸ்மார்ட்போன்' பயன்படுத்த தொடங்கியுள்ளார்.


உலகை உள்ளங்கைக்குள் அடக்கிவிடும் ஸ்மார்ட்போன் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மிக குறைந்த விலையில் ஸ்மார்ட்போன்கள் கிடைப்பதால் பெரும்பாலான மக்கள் ஸ்மார்ட்போன் பயன்பாட்டுக்கு திரும்பி விட்டனர். தினக்கூலி வாங்கும் நபர் கூட 'ஸ்மார்ட்போனை' வாங்கும் சூழல் உள்ளது. ஆனால் உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் 4ஆவது இடத்தில் இருக்கும் நபர் இது வரை 'ஸ்மார்ட்போனை' பயன்படுத்தியதே இல்லை என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஆம், அது உண்மைதான். அமெரிக்காவை சேர்ந்த கோடீஸ்வரரும் பெர்க்சைர் ஹாத்வே நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான வாரன் பப்பெட் தனது வாழ்நாளில் இதுவரை ஸ்மார்ட்போனை பயன்படுத்தியதே இல்லை. ஆடம்பரமான மற்றும் உயர்பாதுகாப்புடைய செல்போன்களை தயாரித்து விற்பனை செய்து வரும் அப்பிள் நிறுவனத்தில் வாரன் பப்பெட் பங்குதாரராக இருந்த போதிலும் சாம்சங் நிறுவனத்தின் பழைய 'பிளிப்' மாடல் செல்போனையே அவர் பயன்படுத்தி வந்தார்.



இந்த நிலையில் வாரன் பப்பெட் தற்போது முதன் முறையாக 'ஸ்மார்ட்போன்' பயன்படுத்த தொடங்கியுள்ளார். தனது பழைய 'பிளிப்' மாடல் செல்போன் நிரந்தரமாக போய்விட்டதாகவும், தற்போது ஆப்பிள் ஐபோன் 11 மாடலை பயன் படுத்தி வருவதாகவும் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது வாரன் பப்பெட் தெரிவித்தார்.

அதே சமயம் அழைப்புகளை கையாள மட்டுமே 'ஸ்மார்ட்போனை' பயன்படுத்துவதாகவும் பங்கு சந்தை நிலவரம் உள்ளிட்டவற்றை தெரிந்துகொள்ள தனியாக 'ஐபேட்' ஒன்றை பயன்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார். (ஏ)



# இன்றைய நாள்



**மேடம்:** பயணத்தால் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்துகொள்ள முன்வருவீர்கள். தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிட்டும். குடும்ப பொறுப்புகள் கூடும்.



**இடபம்:** திட்டமிட்டகாரியம் திட்டமிட்டபடியே நடைபெறும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமண முயற்சி கைகூடலாம். பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. மிதமான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும்.



**மிதுனம்:** அடுத்தவருக்கு உதவி செய்வதில் ஆர்வம்காட்டும் நாள். சேமித்த தொகையில் சிறிது கரையலாம். புதிய முயற்சிகளில் தடைகளும், தாமதங்களும் ஏற்படலாம். அலைச்சல் அதிகரிக்கும்.



**கடகம்:** வாய்ப்புகள் வாயில்தேடி வந்து சேரும் நாள். இல்லம் தேடி முக்கியப் புள்ளிகள் வருவர். தொலைபேசி வழித்தகவல் தொலைதூர பயணத்திற்கு உறுதுணை புரியும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.



**சிம்மம்:** யோசித்து செயல்பட வேண்டிய நாள். தடைகளும், தாமதங்களும் அதிகரிக்கும். முக்கியப் பொறுப்புகளில் கவனம் தேவை. குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வது நல்லது.



**கன்னி:** யோகமான நாள். புதிய தொழில் தொடங்கத்திட்டமிட்டு வெற்றி பெறும். விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறும். இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**துலாம்:** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்தி வந்து சேரும் நாள். முன்னேற்றப் பாதைக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும்.



**விருச்சிகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள். வி.ஐ.பி.க்களின் சந்திப்பால் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர்.



**தனுசு:** வாக்கு வாதங்களைத் தவிர்த்து வளம் காண வேண்டிய நாள். இனத்தார் பகை மாறி இன்பங்கள் அதிகரிக்கும். வெளிவட்டாரபழக்கவழக்கம் விரிவடையும். பாக்கிகள் வசூலாகி பணவரவைக் கூட்டும்.



**மகரம்:** பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும் நாள். பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படும். தொழில் மாற்றம் செய்வது பற்றிச் சிந்திப்பீர்கள். பொது வாழ்வில் புகழ்கூடும்.



**கும்பம்:** செல்வாக்கு உயரும் நாள். செயலில் வெற்றி கிட்டும். வாகன யோகம் உண்டு. புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். நூதன பொருட் சேர்க்கை ஏற்படும்.



**மீனம்:** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள். தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயல்படுவீர்கள். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

# மதுபான தொழிற்சாலைக்குள் சரமாரியாக துப்பாக்கிச் சூடு!

## ஐந்து பேர் உயிரிழப்பு

வொஷிங்டன் பெப்.28

அமெரிக்காவின் மதுபான தொழிற்சாலையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். மில்வாக்கியில் உள்ள மொல்சன் கூர்ஸ் என்ற தொழிற்சாலையில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது.

51 வயது நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் நபர் ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டார் எனவும், அந்த நபர் சில நாள்களுக்கு முன்னரே பணியிலிருந்து நீக்கப்பட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டவர் மற்றொரு ஊழியரின் தொழிற்சாலைக்குள் நுழைவதற்கான அனுமதிப் பத்திரத்துடன் உள்நுழைந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ)






# தீ விபத்தில் ஐவர் சாவு!

பாரிஸ், பெப்.28

வடகிழக்கு பிரான்ஸில் ஸ்ட்ராஸ்பேர்க்கிலுள்ள ஒரு கட்டடத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மேலும் ஏழு பேர் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், தீ விபத்துக்கான காரணம் தொடர்பாக ஆராயப்படுகின்றது என்றும் தீயணைப்பு வீரர்கள் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# சாதனை மனிதர் காலமானார்

டொக்கியோ, பெப்.28

உலகின் வயதான நபராக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ள ஜப்பானைச் சேர்ந்தவரான சிரெட்ஸு வதானபி தனது 112 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

எப்போதும் சினமடையாது புன்னகையுடன் இருப்பதே தனது நீண்ட ஆயுளின் இரகசியம் என அவர் கின்னஸ் உலக சாதனைப் பதிவேட்டு அதிகாரிகளால் நடத்தப்பட்ட வைபவமொன்றில் தெரிவித்தமைக்கு 13 நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளார். 1907ஆம் ஆண்டு பிறந்த அவர் வட ஜப்பானிலுள்ள நியிகதா நகரில் பராமரிப்பு இல்லமொன்றில் காலமானார். அவரது இறப்புக்கான காரணம் அறியப்படவில்லை.

அதற்கு முன்னர் உலகின் மிகவும் வயதான நபராக கின்னஸ் சாதனைப் பதிவேட்டில் இடம்பிடித்திருந்த ஜப்பானைச் சேர்ந்த மஸஸோ நொனகா கடந்த மாதம் தனது 113 ஆவது வயதில் உயிரிழந்ததையடுத்து உலகின் வயதான நபர் என்ற பெருமையை வதானபி பெற்றார். (எ)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப் பிணைப்பணம் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/11/CON/ BW/676 | மாவட்டச் செயலக அலுவலர்கள் கூட்டு விடுதிக்கான சுற்றுமதில் நிர்மாணம், கிளிநொச்சி | 1.30 மில்லியன் (வரி நீங்கலாக) | C9 and C8 Building | ரூபா 13,500.00 வங்கிப் பிணை 04.06.2020வரை | ரூபா 1500.00 |
| 2 | KN/EB/11/CON/ VP/677 | பூநகரி பிரதேச செயலக வாகனத் தரிப்பிடமும் களஞ்சிய அறையும் விஸ்தரிப்பு | 1.87 மில்லியன் (வரி நீங்கலாக) | C9 and C8 Building | ரூபா 19,000.00 வங்கிப் பிணை 04.06.2020வரை | ரூபா 1500.00 |
| 3 | KN/EB/11/CON/ VP/678 | கண்டாவளை பிரதேச செயலக வாகனத் தரிப்பிடம் நிர்மாணம் | 2.25 மில்லியன் (வரி நீங்கலாக) | C8 and C7 Building | ரூபா 23,000.00 வங்கிப் பிணை 18.06.2020வரை | ரூபா 2000.00 |
| 4 | KN/EB/11/CON/ SH/679 | கண்டாவளை பிரதேச செயலக காவலாளர் அறை, உள்ளக நடைபாதை மற்றும் மதகு நிர்மாணம் | 4.63 மில்லியன் (வரி நீங்கலாக) | C8 and C7 Building | ரூபா 46,500.00 வங்கிப் பிணை 18.06.2020வரை | ரூபா 2000.00 |
| 5 | KN/EB/11/CON/ BW/680 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் விடுதிக்கான சுற்றுமதில் நிர்மாணம். | 3.52 மில்லியன் (வரி நீங்கலாக) | C8 and C7 Building | ரூபா 35,500.00 வங்கிப் பிணை 18.06.2020வரை | ரூபா 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்றவேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663,பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை **28.02.2020** ஆம் திகதியிலிருந்து **18.03.2020** ஆம் திகதிவரை முற்பகல் **9.00** மணி முதல் பிற்பகல் **3.00** மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/……………………." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு **19.03.2020** ஆம் திகதி பிற்பகல் **2.00** மணிக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) **11.03.2020** ஆம் திகதி முற்பகல் **11.00** மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

திருமதி.றூ.கேதீஸ்வரன்,

அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.பெப்.28
வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்ட தொடரில் சென்.நியூஸ்டார், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிகள் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்நியூஸ்டார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்நியூஸ்டார் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. ஆட்ட நாயகனாக சென்நியூஸ்டார் விளையாட்டுக்கழக அணி வீரார் லுகிர்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

மற்றுமொரு போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணிவீரர் பிறேம்குமார் தெரிவானார். (23)



சென்.நியூஸ்டார் வி.க.



வதிரி டயமன்ஸ் வி.க.



மன்னார் பிறீமியர் லீக்:

# மடு எவ்.சி அணி அசத்தலாட்டம்

மன்னார்,பெப்.28
மன்னார் மாவட்ட கால் பந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் 9ஆம் நாள் ஆட்டத்தில் மடு எவ்.சி அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மடு எவ்.சி கால்பந்தாட்ட கழக அணியை எதிர்த்து மன்னார் தமிழ்ஸ் எவ்.சி கால் பந்தாட்ட கழக அணி மோதியது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 47ஆவது நிமிடத்தில் மடு எவ்.சி. கால் பந்தாட்ட அணி வீரர் நிறஞ்சன் முதலாவது கோலைப் போட்டார். அதனைத்தொடர்ந்து 54ஆவது நிமிடத்தில் அதே அணி வீரர் அஜித்த ஒரு கோலைப் போட இறுதியில் மடு எவ்.சி கால் பந்தாட்ட அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (56)

## கடற்கரை கரப்பந்து திடல் திறப்புவிழா இன்று

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் கடற்கரை கரப்பந்து திடல் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தாத்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

காட்சிப் போட்டியில் புத்தூர் சிறி சோமாஸ்கந்த கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய கரப்பந்தாட்ட அணி மோதவுள்ளது. (159)



வவு. திருஞானசம்பந்தர் வித்.

## மாணவிகளுக்கு 2 வெண்கலம் ஓர் வெள்ளி

யாழ்ப்பாணம், பெப்.28
இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கம் நடத்திய பாடசாலை யூனியர் பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா பூந்தோட்டம் திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவிகள் 2 வெண்கலப்பதக்கம் ஓர் வெள்ளிப் பதக்கம் உட்பட 3 பதக்கம் பெற்று பெற்றனர்.

மாத்தறை நாரயன்பிட்டி கம்புறுப்பிட்டிய பாடசாலையில் இடம் பெற்ற போட்டியில் பாடசாலை யூனியர் பெண்களுக்கான குத்துச்சண்டையில் யு.வைஷ்ணவி 46:48 கிலோ எடைப் பிரிவிலும், வி.பிரியங்கனி 48:50 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், டி.சதுர்சினி 52:54 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

சர்வதேச சோட்டோக்கான் கராத்தே போட்டியில்

## வரணி தற்காப்பு கலையக மாணவர்களுக்கு 11 பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.28
சர்வதேச சோட்டோக்கான் கராத்தே சங்கம் சர்வதேச கராத்தே சுற்று போட்டியில் வரணி தற்காப்பு கலையக மாணவர்கள் 11 பதக்கங்களைக் கைப்பற்றினர்.

சர்வதேச சோட்டோக்கான் கராத்தே சுற்று போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தளை அலிக் அலு விகார உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் வரணி தற்காப்பு கலையக மாணவர்கள் 4 தங்கம், 7 வெள்ளி பதக்கங்கள் உட்பட 11 பதக்கங்களைக் கைப்பற்றினர். (422)



பாடசாலை யூனியர் தேசிய குத்துச்சண்டையில்

## தங்கம் வென்றார் தர்சன்

யாழ்ப்பாணம்,பெப்.28
இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கம் நடத்திய பாடசாலை யூனியர் தேசிய ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவன் எம்.தர்சன் தங்கப்பதக்கம் வென்றார்.

மாத்தறை நாரயன்பிட்டி கம்புறுப்பிட்டிய பாடசாலையில் இடம்பெற்ற போட்டியில் பாடசாலை யூனியர்தேசிய ஆண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் எம்.தர்சன் 64:69 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். (23)



யூனியர் பெண்களுக்கான குத்துச் சண்டையில்

## பிளாஷிகா, வினோதா வெண்கலம் வென்றனர்

யாழ்ப்பாணம்.பெப்.28
இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கம் நடத்திய பாடசாலை யூனியர் பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியலாய மாணவிகள் இருவர் வெண்கலப்பதக்கம் பெற்றனர்.

மாத்தறை நாரயன்பிட்டி கம்புறுப்பிட்டிய பாடசாலையில் இடம் பெற்ற போட்டியில் பாடசாலை யூனியர் பெண்களுக்கான குத்துச்சண்டையில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மாணவிகளான எம்.பிளாஷிகா 38:40 கிலோ எடைப் பிரிவிலும், ஆர்.வினோதா 40:42 எடைப் பிரிவிலும் வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றினர். (23)





பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில்

# மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், பெப்.28

தென்மராட்சி கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்து கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசுமத்தியகல்லூரிஅணியை எதிர்த்துமட்டுவில்சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அணி மோதியது. இதில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் கைப்பற்றி கிண்ணம் வென்றது. (23)

பெண்களுக்கான குத்துச்சண்டையில்

# திருஞானசம்பந்தர் வித்தி. மாணவிகள் பதக்க வேட்டை



இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கம் நடத்திய பாடசாலை பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா பூந்தோட்டம் திருஞானசம்பந்தர். வித்தியாலய மாணவிகள் 3 தங்கம், ஓர் வெள்ளி ஓர் வெண்கலம் உட்பட 5 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப்பெற்றனர்.

மாத்தறை நாரயன்பிட்டி கம்புறுப்பிட்டிய பாடசாலையில் இடம்பெற்ற போட்டியில் பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டியில் கீர்த்தனா 46:48 கிலோ எடைப்பிரிவிலும், வி.கிஷாலினி 56:58 கிலோ எடைப்பிரிவிலும், கிருசாளினி 50:52 கிலோ எடைப்பிரிவில் தங்கப் பதக்கத்தையும், எஸ். ஜனுபிரியா 36:38 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், எஸ். ஜானுஷா 48:50 கிலோ எடைப் பிரிவில வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

# அரையிறுதியாட்டத்தில் வடமாகாண அணிகள்

இலங்கைகால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் பிறீமியர் லீக் பிரிவு 2க்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் வடக்கு மாகாண அணிகளான நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி, ஆனைக்கேட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

கொழும்பு பொத்தகான் கால்பந்தாட்ட மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுயாட்டத்தில் ரெட்றோஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுயாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருண்டுவத்தை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# பொன் அணிகளின் ஊடக சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 103ஆவது துடுப்பாட்டத் தொடர் இன்று, நாளை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றவுள்ளது.

மேற்படி போட்டி தொடர்பான ஊடகவியாளார் சந்திப்பு கடந்த திங்கட் கிழமை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ. பி திருமகன் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ. பி திருமகன் தெரிவிக்கையில்;

போட்டி நடைபெறும் நாட்களில் இரு கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், பார்வையாளர்கள் கல்லூரியின் பிரதான நுழைவாயினூடக போட்டி நடைபெறும் மைதானத்துக்கு சென்று தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்த போட்டியை பார்க்க முடியும் - என்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிஅதிபர் வணக்கத்துக்குரிய கலாநிதி சொலமன் தெரிவிக்கையில்;

போட்டி நடைபெறும் நாட்களில் வர்த்தகர்களிடம் பணம் பெறும் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை- என்றார்.

இதனைத் தொடர்ந்து ஒரு நாள், மற்றும் ரி-20 துடுப்பாட்டத் தொடருக்கான பிரான்சிஸ் ஜோசப் சுற்றுக் கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஒருநாள், மற்றும் ரி-20 துடுப்பாட்டத் தொடருக்கான ஜெர்சிகள் இரு கல்லூரி அதிபர்கள், அணித் தலைவகள் இணைந்து அறிமுகம் செய்து வைத்தனர்.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் துடுப்பாட்ட பயிற்றுனர் செல்ரன் மற்றும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் துடுப்பாட்ட அணியின் பொறுப்பாசிரியர் ரஞ்சித் தேவராஜன்,யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் பேட்டிபெனிஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)








வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை COURIER Services
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036 077 0111 028 | 029
கரிகணன்
வடக்கின் அச்சகநூரர்

**வீட்டுப்பணிப்பெண் தேவை**
கொழும்பில் வீட்டில் சமைக்க, குழந்தையை பராமரிக்கக் கூடிய பெண்ணொருவர் உடனடியாகத் தேவை.
071 127 9784, 076 073 5363

**தவறிவிட்டது**
பழம் வீதிக்கும் வைமன் வீதிக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கியின் முக்கிய ஆவணங்களுடன் கைபை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ள வும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:
077 419 7113, 077 632 0282

**வெளிவந்துவிட்டது**
தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான "கணித நுண்ணறிவு" 2020
ஆக்கம் - JR. சிறிகாந்த்
ஒமேகா வெளியீடு (கொழும்பு)
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 9881

**காணி விற்பனைக்கு**
கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் கிளி/ மகாவித்தியாலயத்திற்கு (கனிஸ்டா கல்லூரி) அருகாமையில் காணி விற்பனைக்குள்ளது
விலை பேசிதீர்மானிக்கலாம்.
076 570 4995, 077 172 5815

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
SLTES, Register, LL.B, M.A
போன்ற பரீட்சைகளுக் குரிய அனைத்து வினாத்தாள்களும்
பிரிவு - 1
பிரதி ஞாயிறு 9.00am
பிரிவு - 2
செவ். புதன். வியா
5.00pm - 7.00pm
T.P - 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

முதன் முறையாக

# சவூதி அரேபியாவில் பெண்கள் கால்பந்து லீக்



பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் கொண்ட நாடாக கருதப்படும் சவுதி அரேபியாவில் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்காக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து விளையாட்டில் ஊக்குவிக்க பெண்கள் கால்பந்து லீக் போட்டிகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் நோக்கம் விளையாட்டில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதாகும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

பெண்கள் கால்பந்து லீக் போட்டிகள் தலைநகர் ரியாத் மற்றும் இரண்டு நகரங்களில் நடைபெறவுள்ளது. சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மானின் சீர்திருத்தங்களில் பெண்கள் கால்பந்து லீக் போட்டிகளின் உருவாக்கமும் ஒன்று.

"லீக் போட்டிகள் ஆரம்பிக்கப்படுவது சமூக மட்டத்தில் விளையாட்டுகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துகிறது. மேலும் பெண்கள் விளையாட்டு சாதனைகளுக்கு அதிக அங்கீகாரத்தை உருவாக்கும்" என்று அரசாங்கத்தால் நடத்தப்படும் அனைத்து கூட்டமைப்பிற்கான சவூதி விளையாட்டு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபிய பெண்கள் முதன் முதலில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விளையாட்டு போட்டிகளை பார்வையிட அரங்குகளுக்கு அனுமதிக்கப்பட்டனர். அதே ஆண்டு பெண் சாரதிகள் மீதான பல தசாப்த கால தடை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

கடந்த ஆண்டு, சவூதி அரேபியாவில் 21 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், ஆண் பாதுகாவலரின் துணையின்றி கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும் தனியாக வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும், அரசாங்கம் புதிய சீர்திருத்தங்களைச் செய்கின்ற போதிலும் ,அங்கு பல பெண் உரிமை செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 01.01.1950



மறைவு 30.01.2020

அமரர்


**தணிகாசலம் சற்குணபாலதேவி**

எமது குடும்ப விளக்கணைந்த செய்திகேட்டு விரைந்து வந்து ஆறாத்துயருள் அமிழ்ந்திருந்த எமக்கு ஆதரவு தந்து எம்துயரில் பங்கேற்று அன்னாரின் ஈமச்சடங்குகளில் கலந்துகொண்டு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றனைவருக்கும் எம் சிரம்தாழ்த்தி நன்றிகளைச் செலுத்துகின்றோம். மேலும் அன்னார் நோயுற்றுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு இரவு பகல் பாராது மிகவும் சிரத்தையுடன் சிகிச்சையளித்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, இரத்தவங்கி, சிறுநீரக-குருதி சுத்திகரிப்புப் பிரிவு, அனைத்து மருத்துவர்கள், தாதியர்கள், துணை மருத்துவ உதவியாளர்கள், சுகாதார உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அன்னாரின் இறுதிச்சடங்குகளில் நேரடியாகக் கலந்துகொண்ட வைத்தியச்சாலைச் சமூகம், பல்கலைக்கழக சமூகம், ஏனைய உறவுகள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் தொடரூடகங்கள் வாயிலாக அனுதாபங்களை வழங்கிய அன்பர்கள், நண்பர்கள், மலர் வளையங்கள், அஞ்சலிப் பத்திரிகைகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த பொது அமைப்புக்கள், அயலவர்கள் அனைவரையும் நன்றியோடு வணங்குகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித சமுத்திரக்கரையில் 27.02.2020 ஆம் திகதி நடைபெற்று, நாளை (29.02.2020) ஆம் திகதி வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் புதுறோட், ஆறுகால்மட இல்லத்தில் இடம்பெறும். இந்த அழைப்பை தனிப்பட்ட எமது அழைப்பாக ஏற்று 29.02.2020 ஆம் திகதி மதியம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய உணவு உபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**077 990 7000/ 077 418 0512** குடும்பத்தினர்.

## இந்திய பெண்ணை கரம் பிடிக்கும் ஆஸ்திரேலியா வீரர் மக்ஸ்வெல்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் மக்ஸ்வெல் தென்னிந்தியப் பெண்ணை திருமணம் செய்யவுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் மக்ஸ்வெல், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வினிராமன் என்ற பெண்ணை காதலித்து வருகின்றார். 'டேட்டிங்' என்ற பெயரில் இருவரும் ஜோடியாக கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு இடங்களில் சுற்றி திரிந்ததை பார்க்க முடிந்தது. சில மாதங்களுக்கு முன்பு மக்ஸ்வெல் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டபோது, அதில் இருந்து அவரை தேற்றியதில் வினிக்கு முக்கிய பங்கு உண்டு.

இந்த நிலையில் கடந்த வாரம் 'நாம் திருமணம் செய்து கொள்ளலாமா?' என்று மக்ஸ்வெல் கேட்க, அதற்கு வினியும் 'கிரீன் சிக்னல்' கொடுத்தார். இதையடுத்து மோதிரம் மாற்றி திருமண நிச்சயம் செய்து கொண்டனர். இந்தத் தகவலை மக்ஸ்வெல் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

27 வயதான வினிராமனின் பெற்றோர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஆனால் வினிராமன் பிறந்து வளர்ந்து, படித்தது எல்லாமே ஆஸ்திரேலியாவில் தான். அவர் மெல்போர்னில் மருந்தாளர் படிப்பை முடித்துள்ளார்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.